

# விசவத்தனை முருகன் பிள்ளைத் தமிழ்

ந. அன்பரசி

ஓம்

# விசவத்தனை முருகன்

# பிள்ளைத் தமிழ்



பண்டிதர் அ. ஆறுமுகம்

# இந்நூல் வெளியீட்டுக் குழுவினர்

| | |
|---|---|
| சிவஸ்ரீ ச. வைத்தீஸ்வர சர்மா | தலைவர் |
| திரு. ப. சி. செல்வநாயகம் | உபதலைவர் |
| திரு. க. வாமதேவன் | செயலாளர் |
| பண்டிதை பொன். பாக்கியம். | பொருளாளர் |
| திரு. ச. சுந்தரமூர்த்தி | |
| ஆசிரியர் இ. ஆறுமுகம் | |
| ஆசிரியர் மு. கிருஷ்ணபிள்ளை | |
| ஆசிரியர் மு. தம்பியையா | |
| திரு. சோ. க. வேலாயுதர். | |


முதலாம் பதிப்பு

4 - 6 - 82

விசவத்தனை முருகன் கும்பாபிஷேக வெளியீடு.

துந்துபி வைகாசி விசாகம்.

அச்சுப் பதிவு:

ஸ்ரீகாந்தா அச்சகம்,
213, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

ந. அன்பரசி

உ
சிவமயம்

# வெளியீட்டுரை

கலியுகத்தின் கண்கண்ட தெய்வம் முருகப் பெருமான். அவர் கோயில்கொண்டெழுந்தருள் புரியும் தலங்களுள் பண்ணாகத்து விசவத்தனையும் ஒன்றாகும். தமிழ் ஈழத்துப் பழமுதிர்சோலை என அதனைப்போற்றும் பண்டிதர் திரு. அ. ஆறுமுகம் அவர்கள் பாடிய விசவத்தனை முருகன் பிள்ளைத் தமிழ் என்ற நூலிற் சிலசில பாடல்களை இரண்டு மூன்று சந்தர்ப்பங்களில் அவர் பாடக்கேட்டு யாம்மிக மகிழ்ந்தோம். அவரிடம் அந்த நூலைப்பெற்று முழுவதையும் பார்த்தபோது அதியற்புதமான பாராயண நூலென்று தெளிந்து வியப்பும் நயப்பும் எய்தினோம். சொல்நவம், பொருள்நயம், பத்திச் சுவை, கற்பனைவளம், இலகுவில் விளங்கத்தக்க செஞ்சொற் சிறப்பு என்பன பலவும் இலங்கும் இந்த இனியநூலைப் பலரும் படித்துப் பன்னிரு கரத்துப் பகவானைப் பக்திபண்ணச் செய்வது மேலான கருமமும் தருமமுமென்று கருதினோம். அச்சேற்றி வெளியிடத்தருமாறு பண்டிதர் அவர்களைக் கேட்டோம். எவ்வித ஊதிபமோ சன்மானமோ கருதாது, அவர்கள் எமது வேண்டுகோளை நன்கு மதித்து அந்நூலை மனமுவந்து தந்தார்கள்.

பண்டிதர் அவர்கள் எங்கள் குலதெய்வமாகிய முருகவிடத்து மிக்க பக்தியுடையவர்கள். 40 வருடங்களுக்கு முன்னரே இரட்டைமணிமாலை, தசாங்கம், கீர்த்தனங்கள் அடங்கிய ''விசவத்தனை முருகப்பெருமான் அன்புமலரை'' ஆக்கி வழங்கினார்கள். பின்னர்த் தல வரலாறு, ஊஞ்சல், பதிகம், சடாட்சரகீதம் என்பனகொண்ட ''விசவத்தனை முருகப்பெருமான்'' என்னும் நூலை அண்மையில் ஆக்கியுதவினார்கள். அவர்கள் ஆக்கிய ''வழக்கம்பரை அம்மன்''

என்ற நூலை அரங்கேற்றிய அறிஞர்கள், அவரைப் பொன்னுடையாற் போர்த்திக் கௌரவித்தார்கள். பண்டிதர் அவர்களின் "தொல்புரம் பூதராசி அம்மன்" என்ற நூலை வெளியீடுசெய்த அந்தத் தேவஸ்தானப் பரிபாலகர்கள் அவரின் பக்தியுணர்வையும், புலமைத் திறத்தையும் பாராட்டி அருட்புலவர் என்ற விருதுசூட்டிப் பாராட்டினுர்கள். வயது, அறிவு ஆற்றல்களால் முதிர்ந்து சித்தத்தெளிவு பிறந்த நிலையிலே பண்டிதர் அவர்கள் ஆக்கிய பிள்ளைத்தமிழ் எல்லா வகையாலும் சிறப்புற்று விளங்குவதில் வியப்பொன்றுமில்லை.

பண்டிதர் அவர்களின் நூலை அச்சிட்டு வெளியிடுவதற்குப் பொறுப்பேற்ற சபையாரின் பணி மிக்கமேம்பாடு உடையதாயினும் பல ஆயிரம் ரூபாய்களைத் திரட்ட வேண்டிய நிலைக்கு வந்துவிட்டது. தனியொருவரே முழுச்செலவையும் கொடுத்து அச்சிட்டு வெளியிடத்தக்கநிலை எங்கள்சூழலில் இல்லை. பலரும் நூல்வெளியீட்டில் பங்குஏற்பதால் அவர்கள் அனைவரதும் பக்தி சிரத்தைக்கும் அபிமானத்துக்கும் அது தூண்டுகோலாய் அமையுமென்று இந்நூல் வெளியீட்டுச் சபையார் கருதினர். அதனுல் நூலின் கிரயத்தை முற்பணமாகப் பல அன்பர்களிடம் பெற்றேம். பெற்றபணம் செலவுக்கு வேண்டிய பணத்தில் நாலிலொரு பங்குக்குச் சிறிது கூடுதலானதேயாகும். அந்தநிலையிலும் நாம் சோர்ந்துவிடாமல், நமது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய பெரியோர் சிலரிடம் நன்கொடையுதவுமாறு கேட்டோம். அவர்கள் மனமுவந்து கணிசமான தொகையை அன்பளிப்பாகத் தந்து நம்மை ஊக்கப்படுத்தினர். திரு. க, எதிர்மன்னசிங்கம் (மலேசியா) திரு. மா. ஜெயபாலா (சிங்கப்பூர்) திரு. தா. ஆறுமுகம் (சிங்கப்பூர்) திரு. சோம திருச்செல்வம் (குவைத்) திரு. த. அமுதலிங்கம் (குவைத்) திரு. வை. சம்பந்தமூர்த்தி (கனடா) திரு. ந. சோமாஸ்கந்தராசா (குவைத்) திருமதி இராசம்மா நாகலிங்கம் (சிங்கப்பூர்) திருமதி பொன்னம்மா சுப்பிரமணியம் (சிங்கப்பூர்) திரு. இ. சிவப்பிரகாசம் (நைசீரியா) என்போர் நன்கொடை நல்கிபோர். இப் பெரியார்

களுக்கும், நூலுக்கு முற்பணம் தந்த அன்பர்களுக்கும் சபையின் சார்பில் உளம்கனிந்த நன்றி கூறுகிறோம்.

சரவண தடாகத்துத் தாமரைமலரில் அவதரித்த பால சண்முகப் பெருமானது திருக்கோலத்தைத் தத்ரூபமாக வரைந்து உதவிய பருத்தி ஓவியர் சிவஸ்ரீ வே. சிவசுப்பிர மணிய சர்மா அவர்களுக்கும், நூலை அழகுற அச்சிட்டு உதவிய யாழ்ப்பாணம் ஸ்ரீகாந்தா அச்சக முதல்வருக்கும் ஊழியர்களுக்கும் மனமார்ந்த நன்றி கூறுகிறோம்.

தோன்றாத்துணையாய் இருந்து எம்மை இயக்குவித்து இப்பெருந் தர்மகாரியத்தை நிறைவேற்றத் திருவருள் பாலித்த முருகப்பெருமானது கருணைத்திறத்தை வியக்கின்றோம்.

முருக பக்தர்களுக்கு இந்நூல் வாய்ப்பானதொரு பாராயண நூலாயமையும் என நம்புகிறோம். அதனால் அனைவரது ஆதரவும் இதற்குக் கிடைக்குமெனத் தேறுகின்றோம்.

''இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க.''

பண்ணாகம்,<br>
சுழிபுரம்.<br>
1 - 6 - 82.

க. வாமதேவன்<br>
செயலாளர்<br>
ஷை நூல் வெளியீட்டுச் சபை

சிவமயம்

முதுபெருந் தமிழறிஞர், ஆசிரியர்க் காசிரியர்,
சைவசித்தாந்த சாகரம், இலக்கிய கலாநிதி,
பண்டிதமணி

## திரு. சி. கணபதிப்பிள்ளை அவர்கள்

மனமுவந்து வழங்கிய

# ஆசியுரை.

பண்டிதர் திரு. அ. ஆறுமுகம் அவர்கள் சுப்பிரமணியப் பிரபாவங்களை மனசில் இருத்திக் கொண்டு பாடிய விசவத்தனை முருகன் பிள்ளைத் தமிழை, பண்டிதை திருமதி பொன். பாக்கியம் அவர்கள் படித்துக்காட்டியபோது, குமரகுருபர சுவாமிகள் அருளிய முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழைக் கேட்டுக்கொண்டிருக்கின்றேனே என்ற எண்ணம் என் மனசிற் குடிகொண்டது.

இப்பிள்ளைத்தமிழ்ப் பாடல்களிற் காணப்படும் கற்பனைத்திறம், உவமைநயம், தெளிவான நடை, சமயக் கருத்துக்கள் ஆதியன வெகுகவர்ச்சிகர மானவை.

பருவங்களுக்கு ஏழாகப் பத்துப்பருவங்களுக்கும் அவர்கள் பாடல்கள் பாடியுள்ளார்கள். ஒவ்வொரு பாடலும் முருகன்மீது பக்தியை உண்டுபண்ணக் கூடியது. அவற்றைத் தனித்தனி விரிக்கிற் பெருகும்.

நக்கீரர், ஔவைப்பிராட்டி, பொய்யாமொழிப் புலவர் ஆகியோருக்கு முருகன் அருள்பாலித்த திறன் பாடல்களில் ஆங்காங்கு காட்டப்பட்டுள்ளமை பிள்ளைத்தமிழை மேலும் சிறப்புறச் செய்கின்றது. கார்த்திகைப்பெண்கள் முருகனை வளர்த்தமை முதலாம் புராணக் கருத்துக்கள் பலவும் விரவி வருவதைக் கற்போர் உணர்வர்

''அண்ணன் விநாயகர்...'' எனத்தொடங்கும் சிறுபறைப் பருவத்துப்பாடல் நகைச்சுவைக் கலப்புடன் பிரணவப்பெருமானும் விநாயகக்கடவுளது திருவருட்டிறத்தை மிக அழகாக எடுத்துக் காட்டுகின்றது.

இவைபோன்ற இனியபல அம்சங்களால் இந்தப் பிள்ளைத்தமிழ் உயர்ந்த வரிசையைச் சேர்ந்ததென்பதை, பிள்ளைத்தமிழ் நூல்களிற் பயிற்சியுள்ளவர்கள் நன்கு அறிவர்.

நல்லாசிரியரும் பண்புமிக்கவருமான பண்டிதர் திரு. அ. ஆறுமுகம் அவர்களின் பாடல்வன்மை பெரிதும் பாராட்டுதற் குரியது. பண்டிதர் அவர்களின் புகழும், பிள்ளைத்தமிழும் நீடித்து நிலைத்து வாழும், திருவருளைப் பிரார்த்தித்துக்கொண்டு இவ்வுரையை வழங்குகின்றேன்.

கலாசாலை வீதி,<br>திருநெல்வேலி,<br>23-5-82. — சி. க.

சிவமயம்

# முகவுரை

விஞ்ஞான அறிவுகொண்டு ஆராய்ந்து மேலைத்தேசத்தார் இக்காலத்தில் வெளிப்படுத்திய அற்புதங்கள் சாதனைகளை, பன்னூறாண்டுகளுக்கு முன்னேயே கீழைத்தேச மெய்ஞ்ஞானிகள் பரம்பொருளின் அருளால் அறிந்து உணர்த்தினர் என்பதற்குச் சங்கநூல்கள், சைவத்திருமுறைகள் சான்றாய் உள்ளன. ஆன்ம அறிவினால் அறியப்படும் முடிவுகளில் குறைகளும் இருக்கலாம். பரம்பொருள் ஞானத்தால் அறியப்படுவன பூரணமான உண்மைகள். அப்பரம்பொருளைக்கண்டவர்கள் மெய்ஞ்ஞானிகள். அவர்களுடைய அறிவே மெய்யறிவு — உண்மைஞானம். பரம்பொருளைக் காண வழி காட்டுவன சமயங்கள்.

உலகில் இன்று நூற்றெண்பதுக்கும் மேற்பட்ட சமயங்கள் வழங்குகின்றன. எல்லாச்சமயங்களும் பரம்பொருளை யடையும் வழிகளாகவே உள்ளன. அந்தவழிகளில் சிறுசிறு வேறுபாடுகள் இருந்தாலும் அவற்றின் முடிவு — இலக்கு ஒன்றே.

எங்கள் சைவசமயம் ஏனைய சமயங்களையும் தழுவி, அவற்றுக்கெல்லாம் சிகரம்போன்று விளங்குகின்றது. சமரச சமயமாகிய சைவம் காட்டும்வழி நேரிய சீரியவழி. தர்க்க அளவைகளும், அனுபூதிமான்களுடைய அருள்வாக்குக்களும் இதனை நன்கு தெளிவுபடுத்தியுள்ளன. "பாழ்வாழ் வெனும் இப்படு மாயையிலே வீழ்ந்து," வந்த காரணம் அறியாது, போகும் இடம் புரியாது, மயங்கு நாங்கள் எங்கள் சமய உண்மைகளை நன்கு படிக்கவேண்டும். அவற்றில் விதித்தவற்றைக் கொள்ளவேண்டும்; விலக்கியவற்றைத் தள்ள வேண்டும். உண்மைச் சைவர்களாகத் தெய்வவாழ்வு வாழ்ந்து சிவபரம்பெருளை யடைதல் வேண்டும்.

சிவபரம்பொருளுக்கு இரண்டுநிலைகள் உள்ளன. ஒன்று தனிநிலை, ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றும்இல்லாது, நினைவுச்கும் வாக்குக்கும் எட்டாது, தானேயாகிய நிலை அது அஃது சொரூபநிலை எனப்படும். மற்றையது அப்பரம்பொருள் தமது சக்தியோடும்கூடி, ஊரும்பேரும் உடையவர்போல, எங்களுக்காக, எங்களைநோக்கி வந்துகொண்டிருக்கும் நிலை. அஃது தடத்தநிலை எனப்படும். நீறுபூத்த நெருப்புப்போன்று திருவருட்பண்பு அடங்கியிருக்கும் பரம்பொருளின் நிலை சொரூபநிலை. அவருடைய திருவருளாற்றல் வெளிப்பட்டு, விநாயகர் வைரவர் கந்தசுவாமியார் வீரபத்திரர் எனப் பலப்பல திருப்பெயர்கள் தாங்கியநிலை தடத்தநிலை. பந்த பாசங்களை முற்றுந்துறந்த மெய்ஞ்ஞானிகளுக்கே பரம்பொருளின் சொரூபநிலை புலப்படும். எம்போல்வார்க்கு அந்தநிலை எட்டாது. தடத்தநிலைகூடப் பூர்வசன்ம புண்ணியம் இருந்தாலே எங்களுக்கு எட்டும்; கிட்டும்.

நாங்கள் பரம்பொருளைக் காணும்பேறு இலகுவில் கிட்டாது. அவரைக் காணவேண்டுமென்ற இதயதாகம் முதலில் ஏற்படவேண்டும். அன்பேவடிவான பெருமானைத் தூய மெய்யன்பினாலேயே காணலாம். மெய்யன்பு இல்லாதவர்களும் பெருமானைப் பாடினால் அவர் அருள் பெறலாம். ''வெண்பிறை முடித்த வேணி வித்தகர் அன்பிலாத பண்பினர் எனினுந் தம்மைப் பாடினர்க் கிரங்குவர்'' என்னும் கடவுள் மாமுனிவர் வாக்கைக் கருத்திற்கொண்டு எம்பெருமானைப் பாடமுயன்றேன்.

''யாமோதிய கல்வியும் எம்மறிவும்
தாமே பெற வேலவர் தந்தது'' என அருணகிரிநாதரும்,
''என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்செய்யுமாறே'' எனத்திருமூலரும்

கூறியருளியவற்றையும் சிந்தித்தேன். முன்குறிப்பிட்ட வண்ணம் பரம்பொருளின் அருட்சக்தியானது வெளிப்பட்டு நிற்கும் தடத்தநிலையிலே எங்கள் குலதெய்வமாகிய முருகப் பெருமான்மேல் பிள்ளைத்தமிழ் பாட ஆசைப்பட்டேன்.

சங்க காலத்திலோ அதனையடுத்து வந்தகாப்பிய காலத்திலோ பிள்ளைத்தமிழ் நூல்கள் தோன்றவில்லை. "அகத்திணையையும் புறத்திணையையும் அதிகமாகப் பாடி அவற்றில் ஆட்சிபெற்றிருந்த தமிழ்ப்புலவர்களின் கவிதைத்துறையில் ஒரு திருப்பம் ஏற்பட்டது அகத்துக்கும் அகமாக அவர்களுக்கு ஒருதிணை பிரிந்தது. தமது ஆத்ம அறிவின் அகவிருத்தியினாலே அத்திணையை உணர்ந்து, குறித்தசக்திவடிவ நிலைகளில் ஒன்றைச் செம்பாகமாகப் பாடும் மரபைத்தொடக்கிவிட்டார்கள். இத்தொடக்கம் தமிழிலக்கிய வளர்ச்சிநிலைகளில் மிக முக்கியமான ஓர் இடமாகும் தமிழ்ப்புலமையும் தத்துவ ஞானமும் தம்முள் இயைந்துகொண்டஇடம் இது. புலவர் கற்பனையும் தெய்வக்கற்பனையாய்ப் பரிணமிக்க வாய்த்த சந்தர்ப்பம் இது. பிரபந்தஇலக்கியங்கள் தொண்ணூற்ருறாய் விரிவடைய உதவியநிலை இது. தமிழ்ப் புலவர்களுள்ளே ஒரு சிலர் தெய்வப்புலவர்கள் என்று திகழ வாய்த்த வாய்ப்பு இது" இவ்வாறு பண்டிதர் மு. கந்தையா அவர்கள் பிள்ளைத்தமிழ் முதலான 96வகைப் பிரபந்தங்கள் தோன்றிய வரலாற்றைக் குறிப்பிடுகின்ருர்கள்.

தென்தமிழ் நாட்டிலே பிள்ளைத்தமிழ் முதலான பிரபந்தங்கள் சென்ற மூந்நூறு ஆண்டுக்குட்பட்ட காலத்தில் பல்கிப் பெருகின. ஈழத்தமிழ்நாட்டுப் புலவர்கள் பிரபந்த இலக்கியங்களில் கோவை, குறவஞ்சி, பள்ளு, உலா முதலான பலவற்றை இயற்றினார்களாயினும் பிள்ளைத்தமிழ்நூல்களை நெடுங்காலமாகியும் இயற்றினரல்லர். இந்தக்குறையை இற்றைக்கு இருபது ஆண்டுகளுக்கு முன்னர் தீர்த்துவைத்த பெருமை ஆங்கிலக்கலைமாணியும் ஆரியமொழியில் வல்லவரும் சைவசித்தாந்தம் தெளிந்தவரும் ஆகிய ஏழாலையூர்ப பண்டிதர் மு. கந்தையா அவர்களுக்கே உரியதாகும். அவர்கள் இயற்றிய மாவைப் பிள்ளைத்தமிழில் உள்ள கருத்துக்கள் சில இந்நூலில் பின்பற்றப்பட்டுள்ளன என்பதனையும் நன்றியறிதலுடன் குறிப்பிடுகின்றேன்.

பாட்டுடைத் தலைவனை இளம்பிள்ளையாக வைத்துப் பாடுவது பிள்ளைத்தமிழ். ஏனைய தலைவர்கள் முதுமையெய்துவார்கள். எந்தக்காலத்திலும் இளமை குன்ருது விளங்கும்

கடவுள் முருகன். அவரே என்றும் பிள்ளைப்பருவம் உடையவர். அவருக்கே பிள்ளைத்தமிழ் மிகவும் பொருத்தமானது. முன்னரே எம் பெருமானை அப்பாலுக் கப்பாலான பொருளாக, அருள்மிக்க தந்தையாக, அன்புத்தாயாகப் பாடினேனாயினும், அவரைச் செல்வக்குழந்தையாகப் பாவித்து, ஆராமையுடன் கட்டித்தழுவிக் கொஞ்சி, ''கண்ணே கண்டே கரும்பே தேனே கருணாகரனே கந்தா முருகா எங்கள் கைக்குள் வாவா'' என்று பலவாறாகக் கெஞ்சி வேண்டுதல் செய்வதில் உள்ளங்கனிவதை உணர்ந்தேன். இந்த உணர்வு நிலையில் அவ்வப்போது அடியேன் பாடிய பாடல்கள் பிள்ளைத் தமிழ்ப் பாடல்களாக உதித்தன.

பிள்ளைத்தமிழ் ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இருவகைப்படும். இந்நூல் ஆண்பாற் பிள்ளைத்தமிழ். காப்பு முதல் சிறுதேர் ஈறாகப் பத்துப்பருவங்களைக் கொண்டது. பருவம் ஒவ்வொன்றும் பத்துப் பாடல்களைக் கொண்டிருத்தல் பெருவழக்காயினும் ஐந்துபாடல், ஒருபாடல் உள்ளபிள்ளைத்தமிழ் நூல்களும் வழங்குகின்றன. சிவஞான சுவாமிகள் அருளிய திருக்கலைசைச் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ் பருவத்துக்கு ஐந்து பாடல்களைக் கொண்டது. தணிகைமணி செங்கல்வராயபிள்ளை பாடிய ஞானசம்பந்தர் பிள்ளைத்தமிழ், புலவர் மு. கோ. இராமன் பாடிய அப்பர் பிள்ளைத்தமிழ் போல்வன பருவத்துக்கு ஒவ்வோர் பாடலே உடையவை. மக்களின் வாழ்நாள் குறைந்து, வாழ்க்கைச்செலவு மிக அதிகரித்து, அச்சுக்கூலி முதலியன உச்சநிலையில் உள்ள நிலையிலே அடியேன் இந்நூலைப் பருவத்துக்கு ஏழுபாடல்கள் உடையதாக அமைக்க நேர்ந்தது.

கையெழுத்துப் பிரதியில் இருந்த இந்நூல் எப்போதாவது ஒருகாலத்தில் அச்சேறி அன்பர்களின் கைகளில் தவழும் என்றுஎண்ணி, கூட்டங்களில் பேசவாய்த்த சந்தர்ப்பங்களில் இந்நூற்பாடல்களிற் பொருத்தமானவற்றை நான் கூறுவதுண்டு. அவ்வாறு கூறக் கேட்டவர்களுள் திரு. க. வாமதேவன் அவர்களும் ஒருவர். உயர்ந்த கொள்கையுடைய

வரும், அன்புவழிநின்று அறிஞரைப் போற்றுபவரும், பலருக்கும் பொதுவான நல்லபணிகளைச் செய்யத் துணைபுரியும் நண்பர் பலரையுடையவருமான திரு. க. வாமதேவன் அவர்கள் இந்நூலை அச்சிட்டு வெளியீடு செய்பத்தருமாறு கேட்டார்கள். எனது அன்புக்கும் நன்மதிப்புக்குமுரிய நண்பர்களையும், என்னிடம் கற்ற அறிவும் நன்றியுமுடைய நன் மாணவர் சிலரையும் கொண்ட நூல்வெளியீட்டுச்சபையை உருவாக்கினர்கள். அச்சபையார் சிறந்த முறையில் அழகுற நூலை வெளியீடுசெய்தமை போற்றத்தக்க முயற்சியாகும்

ஒன்றுக்கும் பற்றாத நாயினுங் கடையேனைக் கொண்டு இந்தப்பிள்ளைததமிழைப் பாடுவித்து, இதனை வெளியீடு செய்யுமாறு சபையாரின் உள்ளத்திற் புகுந்து தூண்டி உத்வேகம் கொள்ளச்செய்து, இதற்குச்சிறந்த ஆசியுரையை முதுபெருந் தமிழறிஞரும் இலக்கிய கலாநிதியுமாகிய பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை ஐயாவிடம் சென்று இதனைப் பாடிக்காட்டி எழுதித்தரும் பண்ணம் எனது பேரன்புக்கும் மதிப்புக்குமுரிய பண்டிதை திருமதி பொன் பாக்கியம் அவர்களைப்பணித்து, அனைத்தையும் நிறைவேற்றி வைத்தவர் சாட்சாத் முருகப்பெருமானே. இந்நூல், இதன் பொருள், அதன் பயன் யாவும் அவரே.

இந்நூல் வெளியீட்டின் நிறைவும் மேன்மையும் சபையாருக்கும், அவர்களின் வேண்டுகோளை ஏற்றுப் பலவகையிலும் துணையாய்நின்ற அன்பர்களுக்குமே உரியவை. நன்றி வணக்கம்.

1 - 6 - 82 அ. ஆறுமுகம்

# விசவத்தனை முருகன் பிள்ளைத்தமிழ்

## கணேசர் காப்பு

திருச்சிற்றம்பலம்

[1]ஒன்றாய் [2]இரண்டுமாய் மூன்றுதொழில் நான்குமறை
ஓதுமைம் பூதம் [3]ஆறும்
உயரங்கம் யாவுக்கும் மூலகா ரணருமாய்
ஓமெனும் பிரண வத்தின்
நன்றான ரூபியாய் [4]யாவற்றி னுங்கலந்
துடனாகி வேறு மாய
நடனகண பதியுபய மலரடிகள் போற்றியெந்
நாளும் துதித்தி டுவனே
[5]மன்றாடி யுமைசுதன் சரவண பவன்குறவர்
மகள்தெய்வ யானை யிவரை
மருவுமிரு புறமுங்கொண் டகிலமும் ஆக்கியும்
[6]மாற்றியுங் காத்த ருளுவோன்
குன்றுதோ றாடுவோன் விசவத் தனைத்தலம்
குடிகொண் டிருக்கு மெங்கள்
குமரனை முத்துக் குமாரனைப் பரவுமென்
[7]குழந்தைத் தமிழ்த ழையவே.

---

1. ஒன்றாய் — பரமசிவமாய்
2. இரண்டுமாய் — சிவமும் சக்தியுமாய்
3. ஆறும் உயரங்கம் — வேதாங்கம் ஆறு. அவை சிட்சை வியாகரணம், நிருத்தம், சோதிடம், கற்பம், சந்தோ விசிதி என்பன.
4. ஒன்றாய் நிற்றல், உடனாய் நிற்றல், வேறாய் நிற்றல்
5. தில்லைக் கூத்தனுக்கும் சிவகாமியம்மைக்கும் மகன்
6. அழித்தும்
7. பிள்ளைத்தமிழ் நூல்

# I. *காப்புப் பருவம்

## திருமால்

[1]பொன்மகள் மார்பிலும் [2]புவிமகள் தோளிலும்
பொருந்திட அனந்த சயனம்
புரிபவன்; உலகுயிர் [3]புரப்பவன்; படைத்திடும்
பொறுப்பினுக் குரிய பிர மன்
தன்னையும் பெற்றவன்; பாரதப் போரினில்
தருமவழி நின்ற [4]ஐவர்ச்
சார்ந்தவன் ஆயதிரு மால்பாத கமலமென்
தலைமிசைச் சூடு வேனே
அன்னையுமை யம்மையும் அப்பனும் அங்கையில்
அன்புடன் அணைத்து மிக்க
ஆர்வமுட னுச்சிமோந் தகமகிழும் மைந்தனை
அறுமுகக் கந்த வேளை
[5]நன்குயர் தருக்களால் பழமுதிர் சோலையென
நவிலும் திருத்த லமெனும்
நல்லவிச வத்தனைப் பதியில்முரு கையனை
நயந்தினிது காக்க வெனவே. 1

---

* குழந்தை நாயகனுகிய முருகனைக் காத்தருளுமாறு காத்தற் கடவுளாகிய திருமால் முதல் முப்பத்து முக்கோடி தேவர்களுகவுள்ள கடவுளரை வேண்டுதல் செய்தல். இப் பருவம் குழந்தை பிறந்து மூன்றும் மாசம் வரையுள்ள காலப்பகுதியில் நிகழுதற்குரியது.

1. மகாலக்குமி 2. பூமாதேவி 3. காப்பவன்
4. பஞ்சபாண்டவருக்குத் துணையாய் நின்றவன்
5. மிகவுமுயர்ந்த மரங்கள் சூழப் பெற்றிருத்தலால்

## சிவபெருமான்

திருமால் தருநன் மக்களெனும்
[1]தெய்வப் பிடியும் [2]குறமின்னும்
சேரும் கடவுள், பன்னிரண்டு
திருத்தோட் கடவுள், மயிற்கடவுள்,
கருணா கரச்சண் முகக்கடவுள்
கந்தக் கடவுள், திருவருளில்
கனிந்த விசவத் தனைத்தலத்துக்
கைவேற் கடவுள் தனைக்காக்க
[3]ஒருமா தொருபால் [4]ஒளிர்முடியில்
ஒருமா தினைக்கொண் டெரிதழலும்
உடுக்கும் ஏந்து திருக்கரங்கள்
உடையா னாகிப் [5]பொற்சபையில்
அருமா நடன மிடும்பெருமான்,
அன்புப் பெருமான், சிவபெருமான்,
[6]ஆலம் அமிர்தாக் கியபெருமான்
அடிகள் போற்றி வேண்டுவனே. 2

---

1. தெய்வயானையம்மை
2. வள்ளிநாயகியம்மை
3. உமையம்மையாரைத் தமது வாம பாகத்திலும்
4. சடையில் கங்காதேவியையும்
5. பொன்னம்பலம்
6. பாற்கடலைத் தேவர் கடைந்தபோது ஆலகால விடம் எழத் தேவர் அஞ்சி ஓடித் தம்மைக் காக்குமாறு சிவனை வேண்ட, அவர் நஞ்சை உண்டு காத்தருளினார்.

என்ற நூலை அரங்கேற்றிய அறிஞர்கள், அவரைப் பொன்னுடையாற் போர்த்திக் கௌரவித்தார்கள். பண்டிதர் அவர்களின் "தொல்புரம் பூதராசி அம்மன்" என்ற நூலை வெளியீடுசெய்த அந்தத் தேவஸ்தானப் பரிபாலகர்கள் அவரின் பக்தியுணர்வையும், புலமைத் திறத்தையும் பாராட்டி அருட்புலவர் என்ற விருதுசூட்டிப் பாராட்டினார்கள். வயது, அறிவு ஆற்றல்களால் முதிர்ந்து சித்தத்தெளிவு பிறந்த நிலையிலே பண்டிதர் அவர்கள் ஆக்கிய பிள்ளைத்தமிழ் எல்லா வகையாலும் சிறப்புற்று விளங்குவதில் வியப்பொன்றுமில்லை.

பண்டிதர் அவர்களின் நூலை அச்சிட்டு வெளியிடுவதற்குப் பொறுப்பேற்ற சபையாரின் பணி மிக்கமேம்பாடு உடையதாயினும் பல ஆயிரம் ரூபாய்களைத் திரட்ட வேண்டிய நிலைக்கு வந்துவிட்டது. தனியொருவரே முழுச்செலவையும் கொடுத்து அச்சிட்டு வெளியிடத்தக்கநிலை எங்கள்சூழலில் இல்லை. பலரும் நூல்வெளியீட்டில் பங்குஏற்பதால் அவர்கள் அனைவரதும் பக்தி சிரத்தைக்கும் அபிமானத்துக்கும் அது தூண்டுகோலாய் அமையுமென்று இந்நூல் வெளியீட்டுச் சபையார் கருதினர். அதனுல் நூலின் கிரயத்தை முற்பணமாகப் பல அன்பர்களிடம் பெற்றேம். பெற்றபணம் செலவுக்கு வேண்டிய பணத்தில் நாலிலொரு பங்குக்குச் சிறிது கூடுதலானதேயாகும். அந்தநிலையிலும் நாம் சோர்ந்துவிடாமல், நமது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய பெரியோர் சிலரிடம் நன்கொடையுதவுமாறு கேட்டோம். அவர்கள் மனமுவந்து கணிசமான தொகையை அன்பளிப்பாகத் தந்து நம்மை ஊக்கப்படுத்தினர். திரு. க, எதிர்மன்னசிங்கம் (மலேசியா) திரு. மா. ஜெயபாலா (சிங்கப்பூர்) திரு. தா. ஆறுமுகம் (சிங்கப்பூர்) திரு. சோம திருச்செல்வம் (குவைத்) திரு. த. அமுதலிங்கம் (குவைத்) திரு. வை. சம்பந்தமூர்த்தி (கனடா) திரு. ந. சோமாஸ்கந்தராசா (குவைத்) திருமதி இராசம்மா நாகலிங்கம் (சிங்கப்பூர்) திருமதி பொன்னம்மா சுப்பிரமணியம் (சிங்கப்பூர்) திரு. இ. சிவப்பிரகாசம் (நைசீரியா) என்போர் நன்கொடை நல்கிபோர். இப் பெரியார்

## விநாயகப்பெருமான்

எப்பணி இயற்றினும் தற்பர விநாயகனை
ஏத்தித் தொடங்கின் நிறைவாம்
இல்லையே லிடையூறு வந்துறும் எனுமுண்மை
எண்ணாத தேவர் முன்னாள்
முப்புரத் தசுரரை முடிக்கச் சிவன்போர்
முனைச்செல அமைத்த தேரை
[1]முரித்தருள் விநாயகப் பெருமான் மலர்ப்பதம்
முடிமிசைச் சூடு வேனே;
ஒப்பில் தவத்தினால் [2]மாயைமகன் ஆயிரத்
தெட்டண்டம் நூறொ டெட்டு
யுககாலம் ஆளும் வரம்பெற் றருள்மறந்
தும்பரை வதைப்ப அன்னோர்
அப்பனே அடியோம் படுந்துய ரகற்றுகென
அழுதுமுறை யிட்டு வேண்ட
அறுமுகங் கொண்டவ தரித்தவிச வத்தனையில்
ஐயனைக் காக்க வெனவே. 4

---

1. ''செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்''

என்பது திருக்குறள்.

எந்தக் கருமத்தைத் தொடங்குவதாயினும் விநாயகரை வழிபட்டு முன்னிட்டுத் தொடங்குவதே செய்யத்தக்கது. அவ்வண்ணம் செய்யாதபடியால் தேவர் செய்த தேர் அச்சு முரிந்தது

2. சூரபன்மன்

## வைரவப் பெருமான்

தாமே பரப்பிரமம் என்றுதிரு மால்பிரமன்
தம்முளே மோத அவரைச்
சார்ந்ததே வர்களும் சிவநிந்தை செய்திடச்
சங்கார மூர்த்தி யாகிப்
[1]பூமேவு பிரமனின் தலையொன்று கொய்து[2]சுரர்
புண்படக் குருதி கொண்டு
புனிதஞ்செய் வைரவப் பெருமானை நித்தமும்
போற்றித் துதித்தி டுவனே
[3]தாமேவி வழிபடச் சந்தியா காலங்கள்
சகத்தவர்க் கிடைஞ்ச லென்னச்
சாமத்தில் வானவர் குழுவந்து கற்பகத்
தருமலர் மாரி பெய்து
பாமேவு திருவடிகள் முடிசூடி வழிபடப்
பயிலும்விச வத்த னையெனும்
பழமுதிர் சோலையில் வளரும்முரு கையனைப்
பாதுகாத் தருள்க வெனவே. 5

---

1. தாமரை மலராசனராகிய பிரமதேவர்
2. தேவர்
3. தாம் + மேவி = தாங்கள் வந்து (காலைமாலை ஆகிய சந்தியா காலங்களில் விசவத்தனைத் தலத்தில் மக்கள் திரண்டு நின்று வழிபாடு செய்வர். அந்த வேளைகளில் தேவர்களாகிய தாமும் வழிபடச் சென்றால் மக்களின் வழிபாட்டிற்கு இடையூறாயிருக்கு மென்றெண்ணி அத் தேவர்கள் நடுச்சாமத்தில் வந்து வழிபடுவர் என்றவாறு.

## சமயகுரவர், சந்தான குரவர், சண்டேசுரர்

செந்தமிழ் வேதமாம் தேவார [1]வாசகச்
சிவதோத் திரங்கள் தந்த
திருஞான சம்பந்தர் நாவேந்தர் சுந்தரர்
திருவாத வூர ரோடு
சந்தான குரவராய்ச் [2]சாத்திரங் கள்தந்த
சால்புடைய [3]நால்வ ரைவிதி
தவறுது செய்யுமிறை வழிபாட்டின் பேறுதரு
சண்டேசு ரக்க டவுளை
வந்தனை செய்குவேன் விசவத் தனைத்தலம்
வதிந்தெம்மை வாழ வைக்கும்
[4]மங்கையுமை மைந்தனைச் செந்திலுறு கந்தனை
மயில்வா கனக்க டவுளைப்
பந்தம் அறுத்தின்ப வீடருளும் ஞானகுரு
பரனை[5]யைங் கரனி ளவலைப்
பன்னீர் கரத்தனைப் பாங்கராய்ச் சூழ்ந்தினிது
பாதுகாத் தருள்க வெனவே. 6

---

1. திருவாசகம் 2. மெய்கண்டசாத்திரம் 14,

3. மெய்கண்டார், அருணந்திசிவம், மறைஞானசம்பந்தர், உமாபதிசிவம்.

4. உமையம்மை உலகங்கள் மக்களைப் பெற்றுராயினும் ஏனையோரைப்போலக் கருவில் தாங்காது தோற்றுவித்தமையின் மங்கை — கன்னி எனத் துதிக்கப்படுவர்.

5. விநாயகரின் தம்பியை

## ஏனைய கடவுளர்

சிவனருட் கட்டளைப் படிசிருட் டித்திடும்
திசைமுகனை அமரர் கோனைச்
செழுங்கலைக் கரசியைச் செந்திருவை [1]ஏழாய
தெய்வநன் மாத ராரைத்
தவமருவு [2]முப்பத்து முக்கோடி தேவரைத்
[3]தருநவக் கிரக மாரைத்
தாழ்ந்தினிது பாடிமலர் சூடியடி யேனிதய
தாகமொடு போற்று வேனே
பவமிகுங் கலியுகக் கண்கண்ட தெய்வமருள்
பாலிக்கும் குமர மூர்த்தி
பச்சைமயில் வாகனன் வெற்றிவடி வேலவன்
பைந்தமிழ்ப் புலவ ரேறு
புவனமெல் லாமீன்ற சிவகாமி திருமகன்
பொய்யில்புல வர்க்கெ ளிமையோன்
புனிதவிச வத்தனையி லினியனைச் சேவித்துப்
புடைசூழ்ந்து வருக வெனவே. 7

---

1. ஏழாய தெய்வமாதர் — அபிராமி, மகேசுவரி, நாரா யணி, கௌமாரி, வாசுகி, இந்திராணி, காளி
2. முப்பத்து முக்கோடி தேவர் — அசுவினி தேவர் இருவர், வசுக்கள் எண்மர், சூரியர் பன்னிருவர், உருத்திரர் பதினொருவர் என 33 பேர். கோடி — எல்லை.
3. தருநவக்கிரகங்கள் — ஒவ்வொருவரும் செய்த முன் வினைப் பயன்கள் இறைவன் ஆணைப்படி அவரவர் அனு பவத்துக்கு வரும். அந்தப் பயன்களை அவை வரும் அளவில் குறையாமல் கூடாமல் பார்க்குங் கட்டுப்பாட் டதிகாரிகளாக நவக்கிரகங்கள் இறைவன் ஆணையின்கீழ் அமைந்துள்ளன.

# 2. *செங்கீரைப் பருவம்

தேவர்கள் அசுரரால் தாம்படுந் துயரினைத்
தீர்த்தருளு மாறு வேண்டச்
சிவபிரான் கருணையால் [1]மூவிரு முகத்துமுறு
திருநுதற் கண்க ளிடமாய்
மேவுபொறி யாறினையும் வாயுவும் [2]அனலனும்
வேண்டிவான் கங்கை நதியில்
விடஅவை சரவணம் எய்தி[3]மூ விருமுகம்
விளங்குமோ ருருவ தாக
ஆவலொடு விண்மகளிர் பாலருத் திடவந்த
அமையத்தில் ஆறு வடிவாய்
அம்மைதழு விடமீண்டும் ஆறுமுகம் ஒருமேனி
யாகவந் துலகு காக்கும்
சேவகா விசவத் தனைத்தலக் காவலா
செங்கீரை யாடி யருளே
திருமுருக குமரகுரு பரசரவ ணனந்த
செங்கீரை யாடி யருளே. 1

---

*குழந்தை ஒருகாலை முடக்கி, மற்றைக் காலை நீட்டி, இரு கைகளையும் தரையில் ஊன்றித் தலைநிமிர்த்தி முகமசைத்து ஆடும் பருவம் செங்கீரைப் பருவம். இந்தப் பருவத்தில் குழந்தை தன்முன் நிற்போரை ஆவலுடன் பார்க்கும். அப்போது நிகழும் முக அசைவுகளைச் சாதகமாகக் கொண்டு, தாயரும் பிறரும் பலபல கேள்விகளைக் கேட்பர். குழந்தையின் முகஅசைவுகள் தங்கள் கேள்விகளுக்கான விடை
(ம. ப. பா.)

பொன்னிகரும் மாந்தளிர்ச் செம்மேனி யொருபுறம்
புரட்டியுறு [4]சாணை யின்மேல்
புதைய [5]உதரத்தினை அமர்த்திக் கரங்களிரு
புறத்தினும் மெல்ல ஊன்றி
இன்முகம் மேலெடுத் திருபதமும் மெல்லென
எடுத்தும் மடித்து மூன்றி
எழிலுறும் கதைகளும் கற்பனைக ளும்விரவ
இனிமையொடு தாயர் கேட்கும்
[6]பன்னய [7]விடுப்புகட் கேற்றபதில் சாற்றிடும்
பாவனையில் முகம சைத்துப்
பணிவிடைசெய் வாருளம் குளிர வைக்கின்றசிவ
பாலனே [8]மேதி னிபுகழ்
சின்மயா னந்தவிச வத்தனைக் கந்தரே
செங்கீரை யாடி யருளே
திருமுருக குமரகுரு பரசர வணனந்த
செங்கீரை யாடி யருளே. 2

---

களாகச் சொல்லி மகிழ்வர். செங்கீரை ஆடுதல்=செவ்விய மழலைச் சொற்களைப் பேசி ஆடுதல். கீரை=சொல். பிள்ளைத் தமிழ்ப் பிரபந்த இலக்கணப்படி இந்தப் பருவம் குழந்தை யின் ஐந்தாம் ஆறும் மாசங்களில் நிகழுதற்குரியது.

1. தேவர்கள் தமது துயரினை முறையிட்ட வேளையில் சிவ பிரான் ஆறுதிருமுகம் உடையவராய் இருந்தார். அம் முகங்கள் ஆறினுமுள்ள நெற்றிக்கண்கள் ஆறினும் இருந்து ஒவ்வொன்றாக ஆறு பொறிகள் — சோதிகள் தோன்றின.
2. அக்கினிதேவன்.

மருக்கொழுந் தின்மணம் கமழும்வாய் நீர்வடிய
மங்கையுமை மடிய மர்ந்தும்
வயிற்றினில் இடித்தும் உதைத்தும் அவர்துகிலை
மாசுசெய் திறைவர் மார்பில்
பொருக்கெனக் குதித்துத் ததிங்கிணத் தொம்மெனப்
புழுதிபட நடன மாடிப்
புயத்தினில் ஏறிச் சடைக்கா டிழுத்துப்
புனிதமந் தாரை கொன்றை
எருக்கறுகு முதலான மலர்பத் திரங்களை
எடுத்துச் சிதைத்து வாயின்
எச்சிலொடு கங்கைநீர் மொண்டிறைவர் கையினில்
எரிதழல் அவித்து மேலும்
செருக்கிக் குறும்புசெயும் விசவத் தனைக்குரவ
செங்கீரை யாடி யருளே
திருமுருக குமரகுரு பரசரவ ணானந்த
செங்கீரை யாடி யருளே. 3

---

3. வாயுவும் அக்கினியும் சிவபிரான் ஆணைப்படி அந்த ஆறு பொறிகளையும் பெற்றுச் சென்று கங்கையில்விட அவை பின் சரவண தடாகத்தைச் சேர்ந்து ஆறுமுகமும் பன்னிரு கரமும் ஒரு திருமேனியுமாக அற்புதக் கோலம் கொண்டன. தேவர் ஏவலாற் கார்த்திகைப் பெண்கள் அறுவர் குழந்தைக்குப் பாலூட்ட வரத் தனித்தனி முகம், மேனி கொண்ட ஆறு குழந்தைகளாய் விளையாடின. உமையம்மை வந்து தழுவ ஆறும் முன்போல ஆறுமுகமும், ஒருமேனியும் பெற்றன என்பது கந்த புராணம்.

வரும், அன்புவழிநின்று அறிஞரைப் போற்றுபவரும், பலருக்கும் பொதுவான நல்லபணிகளைச் செய்யத் துணைபுரியும் நண்பர் பலரையுடையவருமான திரு. க. வாமதேவன் அவர்கள் இந்நூலை அச்சிட்டு வெளியீடு செய்பத்தருமாறு கேட்டார்கள். எனது அன்புக்கும் நன்மதிப்புக்குமுரிய நண்பர்களையும், என்னிடம் கற்ற அறிவும் நன்றியுமுடைய நன் மாணவர் சிலரையும் கொண்ட நூல்வெளியீட்டுச்சபையை உருவாக்கினார்கள். அச்சபையார் சிறந்த முறையில் அழகுற நூலை வெளியிடுசெய்தமை போற்றத்தக்க முயற்சியாகும்

ஒன்றுக்கும் பற்றாத நாயினுங் கடையேனைக் கொண்டு இந்தப்பிள்ளைததமிழைப் பாடுவித்து, இதனை வெளியீடு செய்யுமாறு சபையாரின் உள்ளத்திற் புகுந்து தூண்டி உத்வேகம் கொள்ளச்செய்து, இதற்குச்சிறந்த ஆசியுரையை முதுபெருந் தமிழறிஞரும் இலக்கிய கலாநிதியுமாகிய பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை ஐயாவிடம் சென்று இதனைப் பாடிக்காட்டி எழுதித்தரும் வண்ணம் எனது பேரன்புக்கும் மதிப்புக்குமுரிய பண்டிதை திருமதி பொன் பாக்கியம் அவர்களைப்பணித்து, அனைத்தையும் நிறைவேற்றி வைத்தவர் சாட்சாத் முருகப்பெருமானே. இந்நூல், இதன் பொருள், அதன் பயன் யாவும் அவரே.

இந்நூல் வெளியீட்டின் நிறைவும் மேன்மையும் சபையாருக்கும், அவர்களின் வேண்டுகோளை ஏற்றுப் பலவகையிலும் துணையாய்நின்ற அன்பர்களுக்குமே உரியவை. நன்றி வணக்கம்.

*1 - 6 - 82* அ. ஆறுமுகம்

தந்தையோ கவுரியொரு பாங்கிலும் கங்கையைத்
தலையிலும் தாங்கி யுள்ளார்;
தாய்மாமன் செந்திருவை யன்றிநில மகளையும்
தழுவியும் கோகு லத்துச்
சந்தமட வார்பலரை யண்டிமிகு சாகசச்
சல்லாப லீலை புரிவார்;
சார்ந்தமைத் துனனுன நான்முகன் நாவிற்
சரஸ்வதி நிதஞ்சு வைப்பான்;
நுந்தமர் போல்தேவ சேனையை மணந்து [11]பிறை
நுதல்கயல் விழிமின் னிகரும்
நுண்ணிடைச் சீர்வள்ளி முன்குமர னய்ப்பின்பு
முதுதுறவி யாகி யன்னாள்
சிந்தையைக் கவர்ந்தவிச வத்தனையில் மோகனே
செங்கீரை யாடி யருளே
திருமுருக குமரகுரு பரசரவ ணனந்த
செங்கீரை யாடி யருளே. 5

---

9. அண்ணன்மார்=விநாயகர், வைரவர், வீரபத்திரர்,

10. தென்னு=தென்னுடைய சிவன்.

11. பிறைபோலும் நெற்றி, மீன்போலும் கண், மின்னல் போலும் இடை.

பெருவிரல் சுவைத்தமுத மூறும்நின் வாயிதழ்கள்
பிதுங்கிப் புலர்ந்தி டாமல்
பேசுதிரு நாத்தளர்ந் துலராமல் கண்கள்நீர்
பெருகிச் சிவந்தி டாமல்
பொருமிப் புலம்பாமல் குறுவியர்வை சிந்திநின்
பொன்மேனி கருகி டாமல்
பொட்டழகு குலையாமல் தொட்டிலில் உதைந்
பொன்னடிகள் நோவுறாமல் [துநின்
உருமாறி எண்ணிலா யோனிகளின் வாய்ப்பட்
டுதித்தும் மறைந்து மடியேன்
ஊசலா டாமல்நின் பாதத்தொர் தூசியாய்
உருக்கொண் டிருக்க அருளித்
திருமேவு விசவத் தனைப்பதிக் குரவனே
செங்கீரை யாடி யருளே
திருமுருக குமரகுரு பரசர வணனந்த
செங்கீரை யாடி யருளே. 6

பங்குனிப் பரணியிற் கொடியேற்ற நாள்தொட்டுப்
பகருத் தரம்பொ ருந்தும்
பௌர்ணிமைத் தீர்த்தநாள் வரையுள்ள திரு
பதினொன்றும் பக்தி வேகம் [விழா
பொங்கநன் மகளிரும் ஆடவரும் ஆசார
புனிதராய் நினது திருமுன்
போந்துநின் பூசையரு ளுருநன்கு தரிசித்துப்
பூரித்து 1முன்னி னைந்த
தங்கம் பொருள்போகம் வேண்டலில ராயடித்
தாமரைக் கன்பு வேண்டத்
தண்ணளி புரிந்துபல் பேறும்மன நிறைவுமவர்
தாம்பெற்று வாழ அருளும்
செங்கைவடி வேலனே விசவத் தனைக்குரவ
செங்கீரை யாடி யருளே
திருமுருக குமரகுரு பரசரவ ணனந்த
செங்கீரை யாடி யருளே. 7

---

1. பெருமானிடம் பொன், பொருள், மகப்பேறு, திரு மணம் முதலான பலவற்றைக் கேட்கவேண்டுமென்ற ஆவேசத்துடன் வந்த பக்தர்கள் சுவாமி சந்நிதியில் நின்று பூசை கும்பிட்டு, சுவாமியின் அருளுருவைத் தரி சித்தபின் தாம் நினைந்து சென்றவற்றைக் கேளாது திரு வடிப்பேற்றை வேண்டுவாராயினர்.

"யாம் இரப்பவை, பொன்னும் பொருளும், போகமுமல்ல, நின்பால் அன்பும் அருளும் அறனும் மூன்றும்"

—பரிபாடல்.

# 3. *தாலப் பருவம்

துய்யசிவ பூசைவமு வியதொளா யிரத்துத்தொண்
ணூற்றென்ப தின்ம ரைத்தன்
தொகுமிருட் குகைவைத்த பூதமாம் கற்கிமுகி
1தோலாநக் கீர ஞரும்
பொய்கையின் கரையிலே செய்தசிவ பூசையில்
புலன்வழி மனத்தை விடவே
புன்கண்மிகு சிறையிட்ட தவ்வேளை ஆங்குமுன்
போந்திருந் தோர்க ளெல்லாம்
ஐயகோ நும்மோடும் ஆயிரவ ராயினோம்
அறைந்துணும் பூத மினியென்(று)
அலறநக் கீரர்முரு காற்றுப் படைபாட
அக்கணம் வேல்வி டுத்தெம்
ஐயனே! பூதங்கொன் றுங்கவர்க் கருள்செய்த
அறுமுகா தாலோ தாலோ
அழகுவளர் விசவத் தனைப்பதிச் சண்முகா
அப்பனே தாலோ தாலோ. 1

---

* தால்=நா, குழந்தையைத் தொட்டிலிற் கிடத்தி, நாவசைத்துப் பாடிச் சீராட்டுதல் இப்பருவ நிகழ்ச்சியாகும். தாயரும் பிறரும் பாடும் இன்னிசையைக் குழந்தை யுற்றுக் கேட்கும் காலமாக ஏழாம் எட்டாம் மாசங்கள் இருத்தலின் இப்பருவம் இக்கால எல்லையுள் கொள்ளப்படும்.

1. நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமேயென்று பரமசிவனோடு வாதிட்டுத் தோல்வியுறாத தன்மானக் கவிஞர் நக்கீரர்.

மலைமகள் திருமகளை நோக்கி“யென் மைந்தர்போல்
மைந்தர்[1]நிற் குளரோ”வென்ன
“வயிறுபெரு சப்பாணி யானையன் விபரீத
வடிவுடைய அறுமு கன்[2]பொன்
சிலைகளென் றெண்ணுவாய்; காக்கையும் தன்குஞ்சு
சிறந்தபொன் குஞ்சென் னும்; என்
செல்வமகன் மன்மதன் போலொருநன் மைந்த
சிந்தனைக் கும்வருகிலான்; [னுன்
நிலையிது பொறுமையால் உன்சிவன் அவனுக்கு
[3]நெருப்புவைத் தான்.பிச் சையூண்
நித்தமும் ஏற்பவன்” என்ன,மண் தின்னியுன்
நீளன்”என இருவ ரும்பேர்
அலைமோது மாறுவா திடமாறு கூக்காட்டும்
அறுமுகா தாலோ தாலோ
அழகுவளர் விசவத் தனைப்பதிச் சண்முகா
அப்பனே தாலோ தாலோ. 2

---

1. நிற்கு=நீ—நின்+கு=உனக்கு.

2. தங்கக் கட்டிகள்.

3. யோகநிலையிலிருந்த பரமசிவனெதிரில் தேவர் ஏவலால் மன்மதன் சென்று தன் மலரம்புகளைச் சொரிய, பெருமானுர் விழித்துப் பார்க்கையில் அவரது நெற்றிக்கண்ணெருப்பினுல் மன்மதன் எரிந்து சாம்பராயினன்.

அருணகிரி நாதரின் அலங்காரம் அநுபூதி
அருந்திருப் புகழ மிர்தம்
அருட்குமர குருபரர் வெண்பாப்பிள் ளைத்தமிழ்
அன்புநனி சொட்ட உள்ளம்
உருகிடக் கவிஞர்பக ழிக்கூத்தர் ஓதுசெந்
தூர்ப்பிள்ளைத் தமிழ்தன் மானம்
உடையநக் கீரனார் தந்தமுரு காறுவட
லூர் ராமலிங்க அடிகள்
தருதுதிப் பாடல்கள் சுவைத்தஆர் வம்மிக்க
தகைசால் நயப்பி னாலே
தமிழ்மணம் அறியாத பேதையேம் புன்மொழிகள்
தமையுமேற் றுவகை கொள்ளும்
அருள்வள்ள லேமுருக மூர்த்தியே சிவசிவா
அறுமுகா தாலோ தாலோ
அழகுவளர் விசவத் தனைப்பதிச் சண்முகா
அப்பனே தாலோ தாலோ. 3

வேறு

கந்தா முருகா கடம்பா குமரா
தாலோ தாலேலோ
கருணா கரனே கார்த்தி கேயா
தாலோ தாலேலோ
எந்தாய் எல்லா உலகும் காப்பாய்
தாலோ தாலேலோ
எந்தப் பொழுதினும் எங்கள் துணையாய்
இருப்பாய் தாலேலோ

நந்தா விளக்கே நடுநா யகமே
நறும்பா கேதேனே
நாளும் பொழுதும் நீயே யன்றி
நற்றுணை வேறுளதோ
சிந்தா மணியே தெவிட்டா அமிர்தே
தாலோ தாலேலோ
திகழும் விசவத் தனையெம் ஐயா
செய்யா தாலேலோ. 4

அன்பே அன்பில் விளைந்த அமிர்தே
அமிர்தின் அருஞ்சுவையே
அறிவே அறிவின் நிறைவே யழகு
ததும்பும் பூரணமே
இன்பே இன்பின் உருவே திருவே
இறையே தாலேலோ
எங்கும் மேவி எல்லா மாகிய
எந்தாய் தாலேலோ
துன்பே யறியாச் சுடரே சுநதிப்
பொருளே தாலேலோ
தோலா மணியே முத்தே பொன்னே
தோன்றாத் துணையாயெம்
தென்பாய் உள்ளாய் திருமால் மருகா
தாலோ தாலேலோ.
திகழும் விசவத் தனையெம் ஐயா
செய்யா தாலேலோ. 5

ஆரூர் வேணியன் அம்பாள் கணபதி
ஆறு முகப்பெருமான்
அனைவரும் ஒருவர் பலபல பெயரால்
அடியார் ஏத்துவரே
நீறும் திருவைந் தெழுத்து மெங்கும்
நின்றுநி லாவுகவே
நீகத் தனமும் கொலையும் புலையும்
நில்லா தாழுகவே
வேறு சமயக் கடவுளர் பலரும்
வீவர் பிறழ்ந்துழல்வர்
விகற்பமும் முடிவும் தோற்றமு மில்லா
விமலன் சிவனெனவே
தேறித் தெளியச் செய்வாய் குருவே
தாலோ தாலேலோ
திகழும் விசவத் தனையெம் ஐயா
செய்யா தாலேலோ. 6

வேறு

பொய்யா முடலை மெய்யெனவே
புகன்று நம்பி வாழ்நாளெப்
பொழுது மிதனைக் காப்பதற்கே
புழுவாய்த் துடித்துத் துடிதுடித்து
நையா நின்றேன் அழியாத
நானும் ஆத்மா நயமெய்த
நாயேன் சிறிதா யினும் முயன்று
நன்றுற் றிலனே ஆகெடுவேன்

செய்யா குமரா தேவாதி
தேவா நினது திருவருளில்
தேங்கிக் கிடந்தும் பாற்கடல்மீன்
தீம்பாற் சுவைதே ராமையைப்போல்
ஐயா நின்னை யுணராதேற்
கருள்வாய் விசவத் தனையமரும்
அப்பா முருகப் பெருமாளே
அரசே தாலோ தாலேலோ- 7

# 4. *சப்பாணிப் பருவம

காஞ்சியம் பதியினில் குமரகோட் டத்தருச்
சகராய கச்சி யப்பர்
கனவில்நீ திகடசக் கரமென் றுரைத்தமொழி
காப்பெனக் கொண்டு தினமும்
வாஞ்சையொடு நூறுகவி செய்துநின் சந்நிதியில்
மலர்க்காப்பு வைத்த பின்பு
மறுநாள் திருத்தங்கள் கண்டுநின் திருவருள்
மாண்புணர்ந் துருகி யுருகி
நாஞ்சுவைக் கச்சிவ மணங்கமழ ஆக்கியருள்
நற்கந்த வேள்பு ராணம்
நயம்பெற அரங்கேற்றி வைத்தநம் செந்தமிழ்
நாதனே உயிர்கள் வாழ்வில்
தீஞ்சுவை பிறங்கிடச் சப்பாணி கொட்டியருள்
செல்வவிச வத்த னையுறும்
சிவகுமர அரிமருக குருபரா சப்பாணி
சீருறக் கொட்டி யருளே. 1

---

* பாணி=கை, குழந்தை கையோடு கை கொட்டிக் குதூகலிக்கும் பருவம் சப்பாணிப் பருவம். இஃது குழந்தையின் 9-ம் 10-ம் மாசங்களில் நிகழுதற்குரியது. குழந்தை தனது கால்களை முன் மடக்கிப் பாதமும் பொருந்த இருந்துகொண்டு கை கொட்டுதல் — சாளை கொட்டுதல் இப்பருவ இயல்பு.

இன்னறுங் கனிவகை இளநீர் எனப்பலவும்
இலகுதலை வாழை யிலையில்
இதமாய்ப் படைத்துத் தினைமா வுடன்தேன்
இசையப் பிசைந்து தட்டிப்
பின்னுருண் டைகளாய் அகல்விளக் குகளாய்
பிடித்துநெஞ் சுருக நறுநெய்
பெய்து திரியிட்டுமா விளக்கேற்றிச் சீலமொடு
பெண்ணினல நார்ந றுமணம்
மன்னூது பத்திகர்ப் பூரங் கொழுத்தித்தம்
மனம்நேர்ந்த பேறு கள்பெற
வருகார்த் திகைத்திருக் கார்த்திகை விழாவிலே
வள்ளிதிரு மணமும் காட்டும்
தென்னனே பொன்கைக ளாற்கொட்டு சப்பாணி
செல்வவிச வத்த னையுறும்
சிவகுமர அரிமருக குருபரா சப்பாணி
சீருறக் கொட்டி யருளே. 2

ஔவையார்க் கன்றுகனி நல்கநா வல்மரம்
அலைத்துலுப் பியகர த்தால்
அதிபொய்யா மொழியார்க் கருஞ்சுரத்
அளித்தபொன்னங்கரத்தால்[ தினிலுண(வு)
திவ்விய மறைப்பொருள் தெரியாத நான்முகன்
சிரசின்மோ தியக ரத்தால்
திருமால் இழந்தசக் கரங்கய முகனிடம்
திருகிமீட் டளித்த கையால்

தெவ்வரொடு தேவருக் காய்ப்பொருது
சிந்திய திருக்க ரத்தால் [பல்படைகள்
சிவசிவா சரவண பவாவெனும் அடியவர்
சிந்தித்த பேறுக ளெலாம்
செவ்விதின் அருள்கரந் தாற்கொட்டு சப்பாணி
செல்வவிச வந்த னையுறும்
சிவகுமர அரிமருக குருபரா சப்பாணி
சீருறக் கொட்டி யருளே. 3

சூலா யுதம்பாசக் கயிற்றொடு நமன்தூதர்
துரந்துவந் தென்னை யணுகிச்
சூழ்ந்துயிர் கவரவ்ரு பொழுதிலே கந்தனே
சூர சங்கார ஞான
வேலா யுதாவென்று யானழைத் திடவுமவ்
வேளையிற் புள்ளி மயிலின்
மீதமர்ந் தினியகுஞ் சரிவள்ளி புடைசூழ
வெற்றிவே லேந்தி மிக்க
கோலா கலத்துடன் வந்தருளி மறலியின்
கொடுமையை விலக்கி நினது
குஞ்சித பதத்தினில் துஞ்சவும் ஒருவரம்
குறித்தனன் சைவ நீதிச்
சீலா ! வளம்மிக்க விசவத் தனைப்பதிச்
செல்வாசப் பாணி கொட்டு
சிவகுமர அரிமருக குருபரா சப்பாணி
சீருறக் கொட்டி யருளே. 4

### வேறு

மூன்றா யமைந்த சங்கத்து
மும்மைத் தமிழ்ச்செந் தொடைப்பயனே
முந்நான் காகும் திருமறையின்
முடிவே மூல மலமென்னும்
ஆன்ற அகந்தை யினைவேரோ
டறுத்த அடியார் மனவிருளை
அகற்ற எடுக்கும் மணிவிளக்கே
ஆழித் தோன்றும் பகலவனைப்
போன்று மயிலில் இவர்ந்தருளும்
பொன்னே விசவத் தனையில்மெய்ப்
பொருளே சாளை சாளைமிகப்
பொலியக் கொட்டு சப்பாணி
சான்றோர் உறையுள் என்னும்சீர்
தங்கும் பண்ணா கப்பதியின்
தவமே முருகா சப்பாணி
சாளை சாளை சப்பாணி. ௫

அண்ணன் தம்பி இருவரையும்
அப்பன் நோக்கி நும்மிலெவர்
அவனி சுற்றி முதல்வருவீர்
அவர்க்கே இந்த மாங்கனியை
உண்ணத் தருவேன் எனக்கூறி
ஓரஞ் செய்து கணேசர்க்கு
உதவி னாரென் றாடையணி
உதறிக் கௌபீ னத்துடனே

கண்ணிற் படாத விதமொளிக்கக்
கங்கா தரனுர் உமையுடனே
கடிதில் தேடிப் பழனிவந்து
கண்டு ஞானப் பழமேயெம்
தண்ணு ரமுதே எனக்கொஞ்சித்
தடவிக் கெஞ்சும் விசவைவரு
தவமே முருகா சப்பாணி
சாளை சாளை சப்பாணி, 6

1 அகங்கை ஆழி தனையடக்க
2 அகடு வாதா பியையடக்க
அகமோ உணர்ந்தார்க் குணர்வரிய
அப்பன் திருத்தா ளிணையடக்க
சகம்முன் நாளில் வடபால்கீழ்
தாழ்ந்து தெற்கில் மேலெழலைத்
தாள்கள் அடக்கத் தென்றலினைத்
தன்பா லடக்கும் தமிழ்ப் பொதிய
3 நகந்தன் உறையுள் ஆக்கியமா
ஞானி கும்ப முனிவனுக்கு
நயந்த குருவே அருள்நிதியே
நாதா விசவத் தனைப்பதியில்
தகந்தந் தனதந் தனதான
தனவென் றினிது நடனமிடும்
தவமே முருகா சப்பாணி
சாளை சாளை சப்பாணி. 7

1. அகத்தியர் கடலைத் தமது உள்ளங்கையில் அடக்கியமை.

2. வில்வலன் வாதாபி என்ற அசுரரில் முன்னவன் பின்னவனை ஆடாக்கிக் கறியுணவு செய்து அகத்தியர்க்குக் கொடுத்தான். அகத்தியர் உண்டபின், "வாதாபியே வா" என வில்வலன் அழைக்க, வாதாபி முன்னர்த் தன்னையுண்டோரின் வயிற்றைக் கிழித்துக்கொண்டு வந்ததைப்போல் அகத்தியரின் வயிற்றையும் கிழித்துக் கொண்டுவர முயன்றதை அறிந்த அகத்தியர் அவன் சீரணமாகச் செய்தார்.

3. நகம் = மலை

# 5. *முத்தப் பருவம்

ஆயிரந் தலையிரண் டாயிரம் கைகொண்ட
1 அரிமுகத் தவுணன் எதிர்நின்(று)
அமர்செய்த பூதர்களை அள்ளியுண் டிடுதலும்
அஸ்திரம் செலுத்தி யன்னோன்
வாயினை வயிற்றைத் துளைத்திடப் பூதரவ்
வாசல்க ளால்வெ ளிவரும்
வகைசெய்தவ் வவுணனைக் குலத்துடன்
மானவடி வேல்மு ருகனே [மாய்த்திட்ட
தாயினும் தந்தையினும் யாரினும் மிகவினிய
தயாள சற்குரு நாதனே
தாங்கரும் துன்பத்தும் அநியாயம் எண்ணாத
சற்சனர் பலர்க்கு வாய்த்த
தேயமாம் யாழ்ப்பாண விசவத் தனைப்பதிச்
செல்வமே தருக முத்தம்
செம்பவள வாயினால் எங்கள்குல தெய்வமே
திவ்யமுத் தந்த ருகவே.

---

* குழந்தையின் முகத்தோடு முகம் அணைத்து முத்தமிடும் படி வேண்டுதல் செய்யும் நிகழ்ச்சிக்குரியது இப்பருவம். இஃது குழந்தையின் 11-ம், 12-ம் மாசங்களில் நிகழுதற்குரியது:

1. சிங்கமுகாசுரன்,

தூயசர வணபவா என்றுரைத் துருகிமெய்த்
தொண்டர்கள் ஒன்று கூடத்
துரிதமயி லும்வேலும் துணையென்று நம்பினோர்
[1]தொம்தொம்தொம் என்று ஆட
ஆயபௌ ராணிகர் நினதுவிளை யாடல்களை
அன்புடன் கூறி மகிழ
அற்புதம் பலசொல்லி அடியவர் நினதுமெய்
அருளினில் ஊறி நெகிழ
மாயவனும் நான்முகனும் வானவர் கோனுடன்
மகிழ்ச்சிமீக் கூர்ந்து போற்ற
[2]மலைமகளும் [3]அலைமகிழும் உள்நெகிழ்ந் துவகை
வாழ்த்துரைகள் சேர்ந்து சாற்ற [யால்
தேயமவை போற்றுயாழ்ப் பாணவிச வத்தனைச்
செல்வமே தருக முத்தம்
செம்பவள வாயினால் எங்கள்குல தெய்வமே
திவ்யமுத் தந்த ருகவே. 2

---

1. புராண இதிகாசங்களில் வல்ல அறிஞர்கள்

2. உமையம்மை

3. கங்காதேவி

1 சிவனருள் களவியல் நூலினுக் கெவருரை
சிறந்தவுரை யென்று புலவர்
தேறநடு நின்றுணர்த் திடுமுருத் திரசன்ம!
சிவனையல் லாமல் வேறு
எவரையும் பாடிடேன், கோழிபுகழ் வாயினல்
குஞ்சையும் புகழுவேனே
என்னும் 2 மதங்கொண்ட பொய்யாமொ
ஏகிய கொடுஞ்சு ரத்தில் [ழிப்புலவர்
அவலமுறு போழ்தினில் வேடர்குல முட்டையாய்
ஆங்கவர்க் குணவு நல்க
அஃதுண்டு " வேந்தனே, முட்டையே" என
யறிதலொடு பாடவைத்த [நன்றி
சிவகுமர திருமுருக விசவத் தனைப்பதிச்
செல்வமே தருக முத்தம்
செம்பவள வாயினல் எங்கள்குல தெய்வமே
திவ்யமுத் தந்த ருகவே. 3

---

1, இறையனர் களவியல் என்ற அகப்பொருள் நூலுக்குச் சங்கப் புலவர் பலரும் உரை கூறுவாராய்த் தாந்தாம் கூறும் உரையே சரியானதென்று வாதிட, முருகக் கடவுள் உருத்திரசருமன் என்ற பெயர்பூண்ட அந்தணர் குலக் குழந்தையாய் அந்தப் புலவர்களின் உரைகளையெல்லாம் கேட்டு, நக்கீரரின் உரையே சிறந்தவுரை யென்று நடுவராய் நின்று தீர்ப்பளித்தனர்,

2, கொள்கை, பிடிவாதம்.

1இப்பியின் வாய்முத்தம் எச்சிலாகிய குற்றம்
ஏய்ந்துளது 2சங்கி னங்கள்
ஈன்றமுத் தங்கர்ப்ப தோஷமுள தெழிலிபெயும்
முத்தமோ வெற்று நீராம்
4துப்பாய நெல்முத்தம் மண்தோஷம் உடையது
5தொகுவேயின் முத்தம் அடவித்
தோஷமுள 6தானைகளின் முத்தம் விலங்கினத்
தோஷமுள பிறவும் அன்ன
இப்படிக் குற்றமுறு முத்தங்கள் வேண்டிலேம்
எழில்வள்ளி குஞ்ச ரியிவர்க்(கு)
இன்முத்தி நல்கியநின் இணையிலா முத்தமே
யாம்வேண் டினேமு யர்ந்தோர்
செப்புசீர்ப் பண்ணை விசவத் தனைப்பதிச்
செல்வமே தருக முத்தம்
செம்பவள வாயினால் எங்கள் குலதெய்வமே
திவ்யமுத் தந்த ருகவே.

---

1. சிப்பியின் வாயிற் பிறக்கும் முத்தம் சிப்பியின் எச்சில் என்ற குற்றம் உடையது.
2. சங்கு ஈன்ற முத்து மாமிச கர்ப்பத்தில் இருந்த குற்ற முடையது.
3. முகில் பெயும் மழைத்துளியாகிய முத்து வெறும் சுவை யற்ற தண்ணீர்.
4. நெல் முத்துக்கள் மண்ணில் பிறந்த குற்றமுடையவை.
5. மூங்கில் முத்து வனதோஷம் உடையது.
6. யானைத்தந்த முத்து மிருகதோஷமுடையது.

தேவரும் முனிவரும் திகில்கொள்ள அன்ருேர்நாள்
திருக்கைலை தன்னி லாதி
சேடனைக் கயிருக்கி மேருவைப் பம்பரம்
செய்தண்டம் ஒன்றி ஞென்று
தாவவும் மோதவும் வைத்துயிர்கள் நோவுருத்
தன்மையாய் ஆடல் செய்யத்
தந்தையார் கண்டுவகை கொண்டுபா சம்மிகத்
தழுவியின் முத்தம் நல்கி
ஆவலுடன் அம்மைக்கு ''தன்பெருமை இவனின்னும்
அறியாத தன்மை யனென
''ஆம்இவனும் அப்பனைப்போல'' என இரு
ஆலிங்க னஞ்செய் குமரா! [வோரும்
தீவகத் திலங்குயாழ்ப் பாணவிச வத்தனைச்
செல்வமே தருகமுத்தம்
செம்பவள வாயினல் எங்கள்குல தெய்வமே
திவ்யமுத் தந்த ருகவே. 5

வேறு

கந்தா முருகா காங்கேயா
கார்த்தி கேயா சிவபாலா
கருணு கரனே பன்னிரண்டு
கையா செய்யா முருகையா
எந்தாய் கந்த வேளேயென்
றேத்து மவருக் கருள்புரிய
எந்த வேளை யினும்மயிலில்
இவர்ந்து விரைந்து சென்றருளிச்

சிந்தா குலந்தீர்த் திடும்பெருமான்
செல்வச் சிவசண் முகப்பெருமான்
சேர்ந்தார்க் கின்பம் செயும்பெருமான்
சீரார் விசவத் தனையென்னும்
நந்தாத் தலத்தெம் பெருமானே
நாதா முத்தம் தருகவே
நயந்து பவளத் திருவாயால்
நளின முத்தம் தருகவே. 6

பலவா முலகும் நொடிப்பொழுதில்
படைத்த பிரமன் சிந்தித்துப்
பன்னாள் முயன்று பண்ணியதால்
[1] பண்ணகப்பேர் பெறுபதியின்
கலைஞா னக்கண் ணாகும்மெய்
கண்டான் கல்விக் கழகமிங்கு
கல்வி யறிவு தமிழ்வளர்க்கும்
கவினும் அருட்கண் ணாய்விளங்குந்
தலமாம் விசவத் தனைசைவ
சன்மார்க் கஞ்சீர் பெறவைக்கும்
தமிழும் சைவ நெறியுமிகத்
தழைக்க உளத்தோ டுயிருயர்ந்து
நலமாய் வாழ அருள்புரியும்
நாதா முத்தம் தருகவே
நயந்து பவளத் திருவாயால்
நளின முத்தம் தருகவே. 7

1. பண்ணகம்=பண்+அகம்-நன்கு பண்ணப்பட்ட இடம்.

# 6. *வருகைப் பருவம்

செந்தமிழ்ப் புலவரின் திலகமெனும் ஒளவையார்
சிறுநடையில் ஊர்கள் தோறும்
சென்றுவரு நாளொன்றில் உச்சிவெயில் வேளை
திகழ்நாவல் நிழலை யடைய [யில்
மந்தைமேய்த் திடுகின்ற ஓரிளைஞன் நாவலில்
வதிந்துபழம் உண்ணல் கண்டு
மகனே எனக்குப் பழங்கள்சில போடென்று
வாஞ்சையொடு வேண்ட அன்னாய்
நுந்தமக் கெவைவேண்டும் சுட்டபழ மோசுடாப்
பழமோ நுவல்க என்று
நாக்கிக் குலுக்குதலும் வீழ்ந்துமண் படுபழம்
நுகருமுன் ஊதி உண்ண
**'வெந்தபழம் சுட்டதோ பாட்டியே' என்றவரின்**
**வீம்படக் கியவி சவையில்**
**விமலனே** வருகஎம் கைக்குளே வந்தருள்க
விரைந்தினிது வந்தருள்கவே.

---

* நடைபயிலும் குழந்தையைத் தாய்நிற்க வைத்து, இடைவெளி சிறிது விடுத்துத் தான்நின்று, தனது இரு கையும் விரித்துக் கொஞ்சுமொழி பேசி, வருக வருக எனக் கெஞ்சுதல். எங்கோ அப்பாலுக் கப்பாலாய் இருக்கும் பாட்டுடைத் தலைவனைக் கவிஞன் தனது அருகில் வருக வருக என வேண்டுதல்.

வஞ்சகம் பொய்சூது வாதுகொலை களவுபுன்
மதுபுலா லுண்ண லென்னும்
மாபாத கந்தேய்ந்து மேன்மைகொள் சிவநீதி
வையத்து வளர வருக,
பஞ்சம் பயம்நோய் தவிர்ந்திங்கு ளார்தமிழ்ப்
பண்பாடு பேண வருக
பருவமழை பொய்யாது பெய்யவே வந்தருள்க
பாருய்ய வந்த ருளுக
மஞ்சுதவழ் சோலையில் தென்னம் பழம்வீழ
மாங்கனிகள் சிந்த வாழை
மரம்பழக் குலையோடு வீழும்விச வத்தனையை
வாழ்விக்கும் ஐய வருக.
விஞ்சுவிறல் கொஞ்சுமொழி நெஞ்சினிமை
வேல்முருக வருக வருக [கொண்டவடி
விமலனே வருகஎம் கைக்குளே வந்தருள்க
விரைந்தினிது வந்த ருள்கவே. 2

ஓவா துணர்ந்துருகி வழிபடுமெய் யடியவரின்
உள்ளமாம் கமல மலரில்
உவந்துசிவ பெருமானின் மார்பினில்
உமையம்மை திரும டியினில் [தோளினில்
பாவாணர் நாவினில் பொய்யரைப் பாடாத
பதிவிரத முடைய புலவர்
பயில்தமிழ்ச் சங்கங்கள் மூன்றினில் அசுரரைப்
படுத்தும் பெருஞ்ச மரினில்

தேவானை வள்ளியிவர் திருமணஞ் செய்திடத்
திருப்பரங் குன்றில் வேடர்
சிற்றூரில் தணிகையில் கந்தகிரி யினிலெழில்
திகழ்பழநி யம்ப தியினில்
மேவாது மேவுமெம் செல்வமே சேந்தனே
விசவத் தனைப்ப தியுறும்
விமலனே வருகஎம் கைக்குளே வந்தருள்க
விரைந்தினிது வந்த ருள்கவே. 3

ஒருதிரு முகம்பரம சிவனுக்கு மெய்ஞ்ஞான
உபதேசம் செய்யும்; ஒன்று
உம்பர்குறை கேட்டுமிக ஆதரவு காட்டிடும்;
ஒருமுகம் களவு கற்பு
இருநெறியும் நிலைநாட்ட வள்ளியொடு வாரணம்
இன்புறத் தழுவும்; ஒன்று
இனியமெய் யடியரைப் பழவினை நெருங்கவரின்
இடியென முழங்கி யுறுமும்;
கருவமிகும் அசுரரைக் கறுவுமொரு திருமுகம்;
கண்ணியம் சால்பு டையநிஷ்
காமியப் பணிபுரியும் அன்பருக் குற்றவழி
காட்டுமொரு முகமு மாக
மிருதுமிகும் ஆறுமுக தரிசனம் தரவருக
விசவையெம் முருக வருக
விமலனே வருகஎம் கைக்குளே வந்தருள்க
விரைந்தினிது வந்த ருள்கவே. 4

### வேறு

பாத பங்க யங்க ழல்கள்
பரிபு ரங்க ளசையவே
பசிய பிஞ்சுத் தொடைக ளசையப்
பண்டி யுங்கு லுங்கவே
மாத ரிருவர் அணையும் மார்பின்
மணிக்க லன்கள் மின்னவே
வரத கரமும் அபய கரமும்
மாறி மாறி வீசியே
காதி லொளிரக் குண்ட லங்கள்
கண்சி மிட்டி யின்முகம்
காட்டி முடியும் ஆட்டி, யெங்கள்
கந்த முருகன் வருகவே
சீத விசவத் தனையில் ஐய
சிவகு மார வருகவே
செல்வம் வருக வருக எங்கள்
சிந்தை குளிர வருகவே. 5

### வேறு

ஐயா நினது திருக்கோயில்
அசையா மணியின் இசைகேட்டும்
ஆர்வத் துடன்நின் சந்நிதியை
அடைந்து பக்தி பரவசமாய்க்
கையால் துதியா துனதுறையுள்
காலாற் சூழா தவலித்துக்
கசிந்து கண்ணீர் சொரியாத
கயவ னெனையும் ஆண்டமுரு

கையா வருக எமதருமை
அப்பா வருக அன்புருவாம்
அண்ணல் வருக நீதிசெயும்
அரசே வருக பொய்யருக்குப்
பொய்யா வருக விரைந்திந்தப்
பொழுதில் விசவத் தனையிலெங்கள்
பொன்னே வருக துரைவருக
புனிதா வருக வருகவே. 6

உள்ளம் இளகேன் சிவஞான
உணர்வு சிறிதா யினுமில்லேன்
ஓதேன் நினது புகழன்பாய்
ஓநக் கேட்டு உருக்கிலேன்
கள்வன் நடிகன் வஞ்சமிகு
கயவன் நாயே னெனினுமென்பால்
கருணை வைத்துக் காத்தருளும்
கந்தா வருக ஆனந்த
வள்ளால் வருக மங்கையுமை
மைந்தா வருக மாயவனார்
மருகா வருக உலகமெலாம்
வாழ வருக பசுந்தோகைப்
புள்ளி மயிலில் இவர்ந்திந்தப்
பொழுதில் விசவத் தனையிலெங்கள்
பொன்னே வருக துரைவருக
புனிதா வருக வருகவே. 7

# 7. *அம்புலிப் பருவம்

[1]தண்ணளி பொருந்தலால் [2]உலகுதொழவைகலால்
[3]தையலர் புடையு றுதலால்
[4]சந்திரன் என்னலால் [5]தலையளித் திடுதலால்
[6]சாரிருள் அகற்று தலினல்
நண்ணு[7]பல் கலைகளால் [8]சக்திகொண் டாழியை
நன்குகிள ரச்செய் திடலால்
[9]நானிலம் போற்றலால் நின்னைத் தனக்கொத்த
நண்பனுய்க் கருதி யோநம்
வண்ணமயில் வாகனன் புண்ணியத் திருமூர்த்தி
வடிவேற் கரன்மி குந்த
வாஞ்சையொடு விளையாடக் கைநீட்டி யன்புடன்
வருமாறு கூவு கின்றுன்
அண்ணலெங் குமரனெடும் அம்புலீ யாடவா
அரியவிச வத்த னையெனும்
அற்புதப் பதியிலெம் வெற்றிவடி வேலனெடும்
அம்புலீ யாட வாவே. 1

---

* குழந்தை நாயகனேடு கூடி விளையாடவருமாறு தாய் மார் சந்திரனைச் சாம பேத தான தண்ட உபாய முறைகளினல் அழைக்கும் பருவம். இஃது 15-ம், 16-ம் மாசங்களில் இயற்றப்படும்.

சாமம்:— இருவரும் சமமானவர்கள் எனக் கூறுவது. இந்தப் பாடலில் இருவருக்கும் 9 வகைகளில் ஒப்புக் கூறப் படுகின்றது.

| அம்புலி | முருகன் |
|---|---|
| 1. குளிர்ந்த கிரணங்கள் உடைமை. | மிகுந்த அருளுடைமை. |
| 2. உலகத்தவர் வழிபட வைகுதல். | அவ்வாறே முருகனும். |
| 3. 27 நட்சத்திரப் பெண்கள் சூழுதல். | வள்ளி தெய்வயானையர் சூழ்தல். |
| 4. பிரகாசம் உடைமை | அருட்பிரகாசம் உடைமை. |
| 5. பயிர்களையும் சிற்றுயிர்களையும் பாதுகாத்தல். | சர்வான்மாக்களையும் காத்தல். |
| 6. புறவிருள் நீக்குதல் | அகவிருள் நீக்குதல். |
| 7. 16 கலைகள் உடைமை | சகல கலைகளும் உடைமை |
| 8. கவர்ச்சிச்சக்தியால் கடலைப் பெருகச்செய்தல். | வேலினால் கடலைப் பொங்கியெழச் செய்தமை. |
| 9. உலகம் போற்றுதல். | உலகு போற்றுதல். |

ஐம்பெரும் பூதத்து ளொன்றான பிருதுவியில்
அமைந்த ஆயிர கோடியாம்
அண்டத்து ளொன்றிலே ஓரிடத் தம்புலீ
அடங்கியுள் ளாயெம் அண்ணல்
தன்பெரும் வடிவிலோர் மயிர் நுனியில்
தங்கியுள தறிகு வாய்நீ [அண்டங்கள்
தயங்குநின் ஞெளியிரவி யிடமிரவல் பெற்ற
தன்ஞெளியுள் இரவி மறையும் [திவன்
என்றபே ருண்மைகளை எண்ணுவாய் இவனுன்னை
இன்பவிளை யாட்டி னுக்காய்
இக்கணம் அழைத்தனன் வீலவைத் திடாமல்நீ
இங்குவரின் நன்மை பெறுவாய்
அன்பினுடன் ஐயஞெடும் ஆடவா அம்புலீ
அரியவிச வத்த னையெனும்
அற்புதப் பதியிலெம் வெற்றிவடி வேலஞெடும்
அம்புலீ யாட வாவே. 2

உலகம் அறிந்தமறு உள்ளவன் நீயிவன்
ஓர்மறு இலாத நிமலன்
ஒழுக்கம் பிழைத்தவர் வரிசையில் நீயுளாய்
ஒழுக்கவடி வான வணிவன்
இலகுமா வணியிற் சதுர்த்தியிற் காண்போரை
இழிபிறப் புய்க்கு வாய்நீ
எங்கந்த வேளிவனை எந்தவே ளையிலேனும்
ஏத்துவார் உய்தி யுறுவார்.

நிலைகெடும் கலைகள்பதி ஞறுடைய எம்பிரான்
நீடுமெண் ணெண்க லையுளான்
நீர்மையிவை தேர்ந்துமுனை அன்பா
நீவரின் கௌர வங்காண் [லழைத்தனன்
அலகிலாத் தீரனொடும் அம்புலீ யாடவா
அரியவிச வத்த னையெனும்
அற்புதப் பதியிலெம் வெற்றிவடி வேலனொடும்
அம்புலீ யாட வாவே. 3

தேவகுரு பத்தினியை வஞ்சித்து விபசாரம்
செய்தபா வம்,வி வாகம்
செய்தஇரு பத்தேழு பெண்டிரில் கார்த்திகை
ரோகிணி யெனுமி ருவரில்
ஆவல்கொண் டேனையரை நோகவைத் திடுபாவம்,
அன்றுபாற் கடல்க டைந்து
அமுதுபங் கிட்டபோ தமரரின் குழுவினுள்
அவர்களறி யாத வண்ணம்
மேவுமசு ரனையரிக் குக்காட்டித் தண்டனை
விதித்திடச் செய்த பாவம்
விலகிடத், தேயுமுன் குறைநீங்கத், துன்பங்கள்
விடியஇது நல்ல தருணம்
ஆவலுறு குமரனொடும் அம்புலீ யாடவா
அரியவிச வத்த னையெனும்
அற்புதப் பதியிலெம் வெற்றிவடி வேலனொடும்
அம்புலீ யாட வாவே. 4

மாயம் மிகுந்தகிர வுஞ்சகிரி யைப்போழ்ந்து
மாய்த்தவன் நமது வேலன்
வரபலம் மிகுசூர பன்மனைக் கூறுக்கி
மயில்சேவ லாக்கி யாண்டோன்
தீயவசு ரர்குலம் நீறுக்கி வானவர்
திருவாழ்வை எய்த வைத்தோன்
தெய்விகப் பொய்யா மொழிப்புலவர் ஔவை
செருக்கினை அடக்கி யாண்டோன் [யார்
ஆயிரவர் பூதத்தின் வாயிலழி யாதுசிறை
அகற்றிவிடு தலைய ளித்தோன்
அண்ணலெங் குமரகுரு பரனருளும் ஆண்மையும்
அம்புலீ அகில மறியும்
ஆயவிவை தேர்ந்துய்யும் வழியைநீ கொள்ளுவாய்
அரியவிச வத்த னையெனும்
அற்புதப் பதியிலெம் வெற்றிவடி வேலனொடும்
அம்புலீ யாட வாவே. ரு

வேறு

கலைகள் குன்று தெந்நாளும்
கவினும் நிறைவும் நிலைபெறலாம்
கருதும் எண்ணெண் கலைகளையும்
கற்று மெய்ஞ்ஞா னம்பெறலாம்
உலகம் முழுதும் ஓய்வின்றி
உழன்று சுற்றித் திரிதலினல்
உளதாம் துன்பம் இவனைவலம்
உறலால் ஒழியப் பெறுதலொடு

தொலையாப் பிறப்பும் தொலையும்வெஞ்
சுடரோன் இரவ லொளியின்றிச்
சுயமாய்ப் பிரகா சித்திடலாம்
சோபித் திடலாம் அம்புலியே
நலமாய் வாழக் கருதுதியேல்
ஞான விசவத் தனைப்பதியை
நயந்த முருக னெடுங்கூடி
நன்று யாட வருவாயே 6

வேறு

ஈசனார் வேணியி லிருத்தலின் என்னவோ
இறுமாப்பு மிகவும் உற்றாய்
எங்கள்கண் மணியிவன் விளையாடும் ஆசையால்
இதமா யழைக்க ஒன்றும்
பேசுத லிலாதிருக் கின்றனை இவனெம்
பிரான்முடிக் கன்றி அங்கம்
பிறவா மனைத்துக்கும் உரியோன் இவன்
பேசவார்த் தைகளு மில்லை [பெருமை
மாசிலா மணியிவன் சிறிது லுன்னுடைய
வாழ்வுபா ழாகு மெந்த
வல்லமையி னுலும்நீ யுய்யமாட் டாயின்னும்
மதிமோசம் எய்தி லாயேல்
ஆசுமிகும் அம்புலீ விளையாட வருகுவாய்
அரியவிச வத்த னையெனும்
அற்புதப் பதியிலெம் வெற்றிவடி வேலனொடும்
அம்புலீ யாட வாவே. 7

# 8. *சிற்றிற் பருவம்

மெல்லியலி னேமிந்த இல்லிடம் வகுக்கவும்
விளக்கவும் மெழுக வுமென
1 விவிதசொழி லிற்புலன் விட்டதால் நீரிங்கு
மேவியது கண்டி லேமால்
அல்லதுமை யவமதிக் குங்கருத் தெங்களுக்(கு)
அணுவளவும் இல்லை ஐயா
அனைவரும் போற்றுமரு ளாளராம் நீரெம்
அகத்துக்கு வருத லறியின்
எல்லவரும் நும்மைவர வேற்றுமிக அன்பாக
இனிமையாய்ப் போற்றி நிற்போம்
எங்களிறை எங்கள்துரை எங்கள்கண் மணி
ஏத்திஞேம் இரந்து நின்றோம் [யுன்னை
தில்லைநட ராசரருள் செல்வமே அடியேங்கள்
சிற்றில் சிதைத்தி டேலே
திகழும்விச வத்தனைப் பதியமர் குமாரனே
சிற்றில் சிதைத்தி டேலே. 1

---

* சிறுமியர் கட்டும் மணல் வீடு சிற்றில், சிறுவர்கள் அதனைக் காலால் தட்டி யழித்துக் குறும்பு செய்வர். அந்த முறையில் குழந்தை நாயகனுகிய முருகன் தங்கள் சிற்றிலைச் சிதைத்தலுக்கு ஆற்ருத ( ஆன்மாக்களாகிய ) சிறுமியர் அவ்வாறு செய்யவேண்டா மென்று மன்ருடி வேண்டுதலே இப்பருவம் குறிக்கும். இது குழதையின் 17-ம் 18ம் மாசங்களுக்குரியது. சிலர் மூன்ரும் ஆண்டுக்குரிய தென்பர்;

1 விதம் விதமான தொழில்கள், அவை தோரணம் தூக்குதல். பாத்திரங்கள் தேடுதல், அரிசி காய்பிஞ்சு சேகரித்தல் போல்வன.

தந்தையோ உலகுயிர் அனைத்தையும் கருணையால்
தாபரித் தருளும் இறைவர்;
தாயா ரறங்கள்முப் பத்திரண் டுஞ்செய்த
தவம்மிக்க கருணை யம்மை;
முந்துறும் அண்ணரோ பிரணவ சொரூபியாம்
முழுஞானி, அன்புவள்ளல்;
முகுந்தனு கியமாமன் காத்தலே தொழிலான
முதல்வரிவ் வண்ண மாக
நுந்தம் பரம்பரை அறத்தினைக் கருணையை
நுட்பமாய்க் கைப்பி டிக்க
நோதக்க புரிதல் நுமக்கேற் குமோஐய
நோகும்நும் மலர்ப்ப தங்கள்
செந்தமிழ்க் கந்தரே சிறியேங்கள் சிற்றிலைச்
சிதையேல் சிதைத்தி டேலே
திகழும்விச வத்தனைப் பதியமர் குமாரனே
சிற்றில் சிதைத்தி டேலே. 2

எங்களில் ஒருவர்மண மகனாக மணமகள்
எனவின் னொருத்த ரமைய
ஏனையோர் அவரவர்க் கேற்றவே டம்பூண
யாமமைத் திட்ட இல்லில்
சங்கையுறு மணவினை நடத்துவோம் நீரதைத்
தட்டிச் சிதைக்க லாமோ
தக்கநன் மணவாள னாகநுமை வைத்துநாம்
சார்ந்துவிளை யாடி மகிழ்வோம்

மங்கலத் தவிலிசை முழக்குடன் நாதசுர
வாத்தியம் இயப்பி யில்லே
வலம்வந்து கும்பம்வைத் தாரத்தி காட்டிமண
மாலேகள் சூட்டி யணேவோம்
செங்கமல முகவள்ளி தெரியாத வகைசெய்வோம்
சிற்றில் சிதைத்தி டேலே
திகழும்விச வத்தனேப் பதியமர் குமாரனே
சிற்றில் சிதைத்தி டேலே. 3

வேறு

மாற்ருர் உறையும் மனேயாமோ
வஞ்சம் புரியும் கூட்டத்தார்
வதியும் இடமோ, விபசார
மடவார் வதியும் பாழறையோ,
போற்ரு ஒழுக்கம் பூண்டவெறும்
போலி வேட தாரிகள்வாழ்
புன்மைக் குடிலோ யாம்முயன்று
போற்றி யமைத்த சிற்றில்லம்
வேற்ரு ரோநாம் நீரெம்மை
வெறுக்கத் தகுமோ உழுவலன்பு
மிகுந்த எங்கள் நிலேமையினே
விளங்கா தடாத்துச் செய்திடற்கு
ஆற்ருச் சிறியோம் இரக்கின்ருேம்
அடியேம் சிற்றில் சிதையேலே
அழகார் விசவத் தனேயாளும்
அரசே சிற்றில் சிதையேலே. 4

உள்ளன் புடனே உனைத்துதிப்போம்
உணர்ந்துன் புகழே வழுத்திடுவோம்
உவந்துன் கோயில் வலஞ்செய்வோம்
ஒடுக்கு வோமைம் புலன்களையும்
வள்ளற் பிரானுன் பூசனைக்கு
மலர்கள் தருவோம் விதம்விதமாய்
மாலை கட்டி நினக்கணிவோம்
வாஞ்சை யோடும் தழுவிடுவோம்
எள்ளத் தனைபொல் லாங்கேனும்
என்று யினும்நாம் செய்தோமோ?
இனிய மலர்மென் பதம்புழுதி
ஏறும், பரற்கல் உறுத்திடநோம்
அள்ளக் குறையா அருள்நிதியே
அடியேம் சிற்றில் சிதையேலே
அழகார் விசவத் தனையாளும்
அரசே சிற்றில் சிதையேலே. 5

வாசு தேவர் தேவகிக்கு
மகனு யுதித்துக் கோபியரின்
மனையில் வாழ்ந்து கன்னியர்கள்
வாவி புகுமுன் உரிந்துவைத்த
தூக கவர்ந்து குருந்தேறத்,
துறையை யடைந்தோர் வெறுமுடலில்
துலங்கும் மார்பும் அரையும்கைத்
துணையால் மறைத்து நின்றிரப்பப்,

பேசி வம்பு பண்ணக்,கை
பிசைந்து தொடரப், பசுநிரையின்
பின்னே சென்று குழலிசைத்துப்
பெரிய குறும்பு பலசெய்த
ஆசை அம்மான் மாயவரின்
அன்பு மருகன் அலவோநீ
அழகார் விசவத் தனையாளும்
அரசே சிற்றில் சிதையேலே. 6

துய்ய எண்ணெண் கலையாரைத்
துலங்கும் கயிலை மலையாரைச்
சுருதி நான்கும் தருவாரைச்
சோதி ஞான உருவாரை
வையம் வாழ வைப்பாரை
மாறு இன்ப வைப்பாரை
மலங்கள் மூன்றும் அறுப்பாரை
மாற்றார் புரங்கள் செறுப்பாரை
மெய்யில் திருவெண் ணீற்றாரை
மிக்க கருணை யூற்றாரை
விமலை யொருபால் உடையாரை
விளங்குஞ் சூலப் படையாரை
ஐயா ஐயா எனுங்குமரா
அடியேம் சிற்றில் சிதையேலே
அழகார் விசவத் தனையாளும்,
அரசே சிற்றில் சிதையேலே. 7

# 9. *சிறுபறைப் பருவம்

விண்வளம் குன்றலால் நீர்வளம் பயிர்வளம்
1 மின்வளம் குறைந்து பசியால்
வேதனை முழக்கங்கள் செய்கின்ற தொழிலாள
விவசாய மக்க ளென்னும்
2 கண்மிகுந் தோகைகள் உவந்திடச் சூல்கொண்ட
கார்முகில் முழக்க மென்ன
கருணையுறு மெய்யடிய ரென்றிடும் 4 அசுணங்
களியாழ் முழக்க மென்ன [கள்
புண்படும் தீவினைகள் புரிகின்ற கொடியராம்
பொல்லாத பாம்பி னத்தைப்
பொசுக்குங் கடுங்கோடை யிடிமுழக் கெனவும்
பொருந்திடும் வண்ண மினிதாய்த்
திண்ணமாய்த் தேசம் செழித்தனை வரும்வாழச்
சிறுபறை முழக்கி யருளே
திருமேவு விசவத் தனைத்தேவ தேவனே
சிறுபறை முழக்கி யருளே. 1

* குழந்தை நாயகன் விளையாட்டாக ஒட்டை வாளி. தகரம் முதலியவற்றை இரு கைகளாலும் அடித்து ஒலியெழுப்பும் இப்பருவம் 18ம் 19ம் மாசங்களுக்குரியது. சிலர் 4ம் 5ம் ஆண்டுகளுக்குரியது என்பர்.

1 மழைக் குறைவினுல் மின்சாரசக்தியும் குறைய நேரிடும்.

2 மயில்கள்.

8 இசையில் மிக்க ஈடுபாடுடைய பறவைகள்.

தந்தையோ [1]மலையாளி [2]பித்தன்[3] நள் ளிருளிலே
சடைவிரித் தாடி [3]நாற்றத்
தலையோடு கொண்டிரந் துண்ணிநரை
தாயோ பெருத்த[5] நீலி; [யெருதேறி
முந்தியநின் அண்ணனோ பேழ்வயிறு யானைமுகம்
[6]மூன்றுமத வடுவு டையவன்;
முதியதாய் மாமனோ மாட்டிடையன் பேய்ச்சி
முலையுண்டு உயிரு முண்டோன்; [யின்
வந்தமைத் துனன்வெள்ளை [7]வாணியன் எனநினது
வழிகோத் திரங்க ளெல்லாம்
வாயார வண்ணவண் ணக்கதைக ளாற்சொல்லி
வந்திக்கும் அன்பர் வினைகள்
சிந்திட முழங்கித் துரத்துமுயர் சேவகா
சிறுபறை முழக்கி யருளே
திருமேவு விசவத் தனைத்தேவ தேவனே
சிறுபறை முழக்கி யருளே. 2

---

1 திருக்கைலாசமலையில் இருப்பவர்; மலையாளத்தான்
2 மிக்க அன்பு உடையவர் : விசரன்
3 நள்ளிருளில் நட்டம் பயின்றுடும் நாதன்
4 பிரம விட்டுணுக்களின் கபாலங்களை ஏந்துபவர்.
5 நீலநிற மேனியினள்: மிகப் பொல்லாதவள்.
6 கும்பமதம், கன்னமதம், கோசமதம் என்ற அடையாளங்களுடையவர்.
7 சரசுவதியை உடையவர்; எண்ணெய் விற்பவர்.

தந்தைநீ அன்னைநீ தலைவன்நீ [1]சொல்லரிச்
சந்திர மகாரா சன்நீ
[2]தருமன்நீ [3]விசயன்நீ [4]கன்னன்நீ யென்றழகு
தமிழில் வழுத்தி னலும்
சிந்தையிள கிச்சிறிதும் ஈயாத லோபர்பின்
சென்றுழல வேண்டா மென்னைத்
[5]தீப்பித்த னெடு[6]நீலி பெற்றிடுங் கடைமகன்,
[7]சினவடுகன் கரிமு கன்பின்
வந்தவன், கோகுலக் கள்வனு கியகண்ணன்
மருமகன், இழிந்த வேடர்
வளர்ப்புமகள் வள்ளியின் கணவனென் றுங்
வாய்க்குவந் திட்ட வண்ணம் [களின்
செந்தமிழில் வைதாலும் அருள்செய்கு வோமெனச்
சிறுபறை முழக்கி யருளே
திருமேவு விசவத் தனைத்தேவ தேவனே
சிறுபறை முழக்கி யருளே. 3

---

1 வாக்குத் தவறுத அரிச்சந்திரன்
2 பொறுமையில் தருமராசன்
3 வீரத்தில் அருச்சுனன்
4 கொடையிற் கன்னன்
5 ஒரு திருக்கரத்தில் அக்கினியை ஏந்துபவரும், ஆன்மாக்களாகிய குழந்தைகளிடத்தில் மிக்க அன்புப் பாசமுடையவரும் ஆகிய பரமசிவன்.
6 நீலநிற மேனியையுடைய உமையம்மை.
7 உக்கிரமூர்த்தியாகிய வைரவப்பெருமான்.

அண்ணன் விநாயகர் பெருவயிற் றைப்பிடித்
தலைத்துக் குலுக்கி மேளம்
அடித்துத் துதிக்கை முழம்போட் டளந்துபின்
அகலித்து நீண்டு சுளகின்
வண்ணமுறு செவியிரண் டினையும் பிடித்தாட்டி
மார்பின்முந் நூல றுத்து
மாதா பிதாமுன் குறும்புசெய் திட்டாலும்
[1]வனசரர் பாவை யான
பெண்ணிற் சிறந்தகுற வள்ளியுன் [2]இச்சையைப்
பேணப்பின் னின்ற வேளை
பெரியண்ணா ரேவருக என்றழைத் திடுமுனம்
பிளிற்றெலி யுடன்வ ருதலும்
[3]திண்ணிதிற் சேரும் சுகம்பெற்ற தம்பியே
சிறுபறை முழக்கி யருளே
திருமேவு விசவத் தனைத்தேவ தேவனே
சிறுபறை முழக்கி யருளே. 4

---

1. வேடர்
2. விருப்பம்
3. "அன்னதொரு காலை யறுமா முகக்கடவுள்
முன்னொருசார் வந்து முதுகளிற்றின் கோடொற்றப்
பின்னொருசார் வந்து பிடியின் மருப்பூன்ற
இந்நடுவே நின்றான் எறுழ்வயிரத் தூணேபோல்."
— கந்தபுராணம்

1செந்திருவும் 2வாணியும் பகைதீர்ந்து சந்ததம்
திருநடம் புரியும் உறையுள்
தெய்வீக இயலிசை நாடகம் என்னும்முத்
திறமுடைய செந்த மிழிடம்,
நிந்தையில் லாதவிவ சாயமர சாங்கத்து
நியமனம் தருநி தியமும்
நீடுசிங் கப்பூர் மலேசியா தேசத்து
நேசரின் உதவி பலவும்
சொந்தமும் பந்தபா சங்களும் வழுவாது
சுற்றம் புரக்கு மன்பர்
துலங்குமொற் றுமைநீதி நேர்மைமெய்ந்
துய்யசிவ சீல மன்பு [நடுநிலைமை
சிந்தையிற் கொண்டபலர் வாழுமுயர் பண்ணாகச்
சீரூரை வாழ வைக்கும்
திருமேவு விசவத் தனைத்தேவ தேவனே
கிறுபறை முழக்கி யருளே. 5

---

1 இலக்குமி 2 சரசுவதி. இலக்குமி செல்வத்துக்கு அதி தெய்வம். சரசுவதி கல்வியை நல்கும் தெய்வம். இவர்கள் முறையே மாமியும் மருமகளுமாவர். உலகியலில் மாமியும் மருமகளும் ஒரே வீட்டில் ஒற்றுமையாய் வாழ்வது அரிதினுமரிது. செல்வமும் கல்வியும் செறிந்திருப்பதனால் டண்ணாகம் கிராமத்தில் இருவரும் ஒற்றுமையாய் ஆனந்த நடனம் செய்கின்றனர் என்றவாறும்.

இன்றுலகி லுள்ளபல மொழிகளிற் பழமையும்
இலக்கண வரம்பு டைமையும்
இனிமையும் மிக்கமொழி தமிழெனவும் ஏனைய
இனத்தவர் வியக்கும் வகையில்
அன்றுதொட் டினியபண் பாடுகலை நாகரிகம்
அன்புடைய வீர மக்கள்
ஆகவாழ்ந் தோர்தமிழ ரென்னவும் அவர்கள்
அனுட்டித்த நல்ல சமயம்
[1]நன்றெலாங் கொண்டெலாப் பாவமும் தள்ளி
ஞானிகள் பலரை யீந்து [மெய்ஞ்
[2]ஞாலம் புகழ்சைவ மென்னவும் நம்மவர்
நன்குதேர்ந் துறுதி கொள்ளச்
சென்றுசென் றெவருளத் தினுமுறைக் கும்விதம்
சிறுபறை முழக்கி யருளே
திருமேவு விசவத் தனைத்தேவ தேவனே
சிறுபறை முழக்கி யருளே. 6

---

1 புண்ணியம்.

2 உலகம்

வேறு

பொருளல் லவற்றைப் பொருளென் றெண்ணும்
புன்மன விருளகலப்
பொய்கள வாதிய பாவம் பலவும்
புரிவோர் போயகலப்
பெருகும் பஞ்சம் பட்டினி யகலப்
பேதைமை நோயகலப்
பிறநாட் டவரின் நாகரி கப்பேய்ப்
பித்த மகன்றொழிய
அரும்பே ரறிஞரை வாட்டும் வறுமை
அகன்று நிலாதோட
அரக்கர் மதத்தால் இரக்க மிலாமல்
ஆற்றும் போரொழியக்
குருவே அரசே தவமா நிதியே
கொட்டுக சிறுபறையே
குலவும் விசவத் தனையிற் குகனே
கொட்டுக சிறுபறையே. 7

# 10.* சிறுதேர்ப் பருவம்

பொன்னிறக் கஸ்தூரி மஞ்சள்திரு மேனியிற்
பூசிவெந் நீரி லாட்டிப்
புதுத்துணியி னுலீரம் ஒற்றிவிழி உச்சிமோந்
தூதித் துடைத்து நீறு
சென்னியில் நெற்றியில் மார்பிலெங் கும்பூசிச்
சிறந்தபட் டாடை கட்டித்
திலகமிட் டணிகள்பல பூட்டிமயிர் வாரிமிகு
சிறப்புகள் செய்து தாயர்
என்னென்ன வோகதைகள் பேசியழ குக்கழ(கு)
இயற்றிக் களிக்கு மெங்கள்
இன்பமே திருமுருக [1]செம்பதுமை நன்மருக
எங்குமாய் எவையு மான
சின்மயா னந்தனே செங்கைவடி வேலனே
சிறுதேர் உருட்டி யருளே
தெய்வவிச வத்தனைச் சைவமெய் நாயகா
சிறுதேர் உருட்டி யருளே. 1

---

* பாட்டுடைத் தலைவனுகிய குழந்தைநாயகன் தென்னங் குரும்பைகள், ஈர்க்கு முதலியவற்ருல் தேர் செய்து உருட்டி விளையாடுவதாகக் கற்பனைசெய்து பாடப்படும் இப்பருவம் 20-ம், 21-ம் மாசங்களுக்கு உரியது. சிலர் 6-ம், 7-ம் ஆண்டுகளுக்கு உரியதென்பர்.

1. மகாலக்குமி

வலம்புரிநன் முத்தே யரும்பொனே மாணிக்க
மணியே அசல்வ யிரமே
வாடாத மலரேயம் மலரிலுறு வாசமே
மலர்சொரியும் இனிய தேனே
நலம்புரியும் அப்பனே அம்மையே ஐயனே
நமதினிய உயிரின் உயிரே
ஞானமெய் யமிர்தமே அமிர்திலுறும் இனி
ஞாயிற்றி லுறுவெம் மையே [மையே
இலங்குசந் திரனிலுறு தண்மையே தென்றலில்
இயைந்துள்ள இனிய சுகமே
இன்பமே மாறுத அன்பே ஒரேவிதம்
இருக்கின்ற இளவ ழகனே
சிலம்பும் சதங்கையும் தண்டையும் ஒலித்திடச்
சிறுதே ருருட்டி யருளே
தெய்வவிச வத்தனைச் சைவமெய் நாயகா
சிறுதே ருருட்டி யருளே. 2

ஆலமமிர் தாக்குமருள் அப்பனுக் கோமெனும்
அரும்பிர ணவக்க ருத்தும்
அகிலமும் ஈன்றவுமை யம்மையார்க் களவிலா
ஆனந்த [1] வாத்ச லியமும்
[2] ஞாலமெல் லாந்தனக் குள்ளடக் குந்தமைய
ஞர்க்கரும், தோள்வ லிமையும்
நன்மாம னுக்கரிய [3]ஆழிப்ப டைக்கலமும்
நான்குமுக னைத்து னற்குக்
கோலமுற யாவும் படைக்கும் திறங்களும்
குறவர்மின் ஞேடு தெய்வக்
கொடியிவர்க் கிருபுறமும் அடியவர்க் கடி
கொடுத்தருளும் வரத முதலே [யிணையும்
சீலமிகு செல்வமே நீலமயில் வாகஞ
சிறுதே ருருட்டி யருளே,
தெய்வவிச வத்தனைச் சைவமெய் நாயகா
சிறுதே ருருட்டி யருளே. 3

---

1 தாம்பெற்ற குழந்தை இடத்தில் தாய் தந்தையருக் குள்ள அன்புப் பாசம்.

2 உலகம்.

3 சக்கரம்.

ஆடலாற் பாடலால் [1]அரவணைத் திடுதலால்
[2] ஐம்புலன் விழையு மின்பம்
அளிக்கும்[3] அர மகளிரைப் போல்நடித்
அழிக்கின்ற விலைம களிரை [தெழில்சீர்
நாடலால் நோய்மிடிக் காளாகி யுற்றவர்
நாட்டவர் வெறுத்த லாலே
நானிலத் தினில்வாழ ஒப்பாது தற்கொலையை
நாடியரு ளுசை லத்தின்
மாடமலி கோபுரத் துச்சிநின் றும்வீழ்ந்து
மடியாமல் அருண கிரியை
வாகாக ஏந்தியருள் செய்தவர் வாக்கினில்
வயங்கித் திருப்பு கழெனும்
தேடலா காவமிர் துலகெய்த வைத்தகுக
சிறுதே ருருட்டி யருளே
தெய்வவிச வத்தனைச் சைவமெய் நாயகா
சிறுதே ருருட்டி யருளே. 4

---

1 சொகுசாகத் தழுவுதல்

2 '' கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே யுள ''
என்ற குறளுடன் ஒப்பு நோக்குக.

3 தேவப்பெண்கள்.

[1]ஏகமா யருவமாய் என்னிலையில் சும்மா
இருக்கின்ற பரம சிவம்நான்
என்குழந் தைகளான நீங்கள்முன் பின்செய்த
[2]இருவினைப் பயத்தி னாலே
சோகமுற் றுழல்வதற் கிரங்கியுமை யாட்கொளத்
தூயசிற் சக்தி தொடர்பால்
துலங்குமிவ் வுருவுகொண் டுங்களைத் தேடித்
துரந்திங்கு வந்து மக்கு
ஆகவேண் டும்அருள் பாலித்து வருகிறேன்
அஃதெண்ணி உய்யும் வழியை
அறிந்துதா னந்தவம் ஆற்றியெப் பாவமும்
அணுகாது வாழ்ந்து நீவிர்
தேகமுடி வில்எனைச் சேருமின்'' எனக்கூறிச்
சிறுதே ருருட்டி யருளே
தெய்வவிச வத்தனைச் சைவமெய் நாயகா
சிறுதே ருருட்டி யருளே. 5

---

1. ஒரே பொருளாய்

2. நல்வினை, தீவினையிரண்டும்

1சிவமூல மந்திரத் துடன்நின் 2சடாட்சரம்
தியானித் திடைவி டாமல்
செபித்துமிகு சீலராய்க் கந்தர்சட்
திருமுன்பு வந்து தொழுது [டியில்நினது
தவமான திதுவென்ன உபவாசம் பூண்டுறுதி
தருகந்த புராண படனம்
தணியாத அன்பிற் கசிந்துருகி நாடோறும்
தவறுது கேட்கு மடியார்
3பவநோய் ஒழிந்துளம் நேர்ந்தபே றெய்தவருள்
பாலிக்கும் ஞான குருவே
பண்புடைய நல்லவர்கள் வாழுமுயர் பண்
பதிசிறந் தொளிர வைக்கும் [ணுகப்
சிவனே குகாசரவ ணைந்த வேலவா
சிறுதே ருருட்டி யருளே
தெய்வவிச வத்தனைச் சைவமெய் நாயகா
சிறுதே ருருட்டி யருளே. 6

---

1. சிவாயநம
2. சரவணபவ
3. பிறவி

அண்டங்கள் யாவுந்தம் நிலையினிற் பெயராமல்
ஆங்காங்கு நின்று ருளவும்
அரசுகள் அனைத்துந்தம் நாட்டினிலறம்பேணி
ஆஞ்ஞாசக் கரமு ருளவும்
மண்டலத் தறவோர்கள் அருளாளர் ஞானிகள்
வரம்புவழு வாது ருளவும்
வகைமிக்க சமயங்கள் அருள்வழியில் தெய்வீக
வாழ்வுநிலை பெறவு ருளவும்
தொண்டெனக் கொண்டுபல் தொழிலாள ருங்
துரிதமாய்ச் செய்து ருளவும் (கடமை
தோகையரும் ஆடவரும் அன்புவழி இல்லற
சுகம்பெற்று நன்கு ருளவும்
தெண்டாயு தக்கடவு ளேகந்த முருகனே
சிறுதே ருருட்டி யருளே
தெய்வவிச வத்தனைச் சைவமெய் நாயகா
சிறுதே ருருட்டி யருளே. 7

திருச்சிற்றம்பலம்.

விசவத்தனை முருகன் பிள்ளைத்தமிழ்
முற்றிற்று.

ஸ்ரீகாந்தா அச்சகம்,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 256

ந.அன்பரசி